

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அகஸ்தியமகாமுனிவர்

அருளிச்செய்த

# குருநாடிசாஸ்திரம்

இருநூற்றுமுப்பத்தைந்து.

இஃது

பு. எ. பார்த்தசாரதிப்பிள்ளை அவர்களால்

பரிசோதிக்கலுற்று,

சிதம்பரம் புக்ஷாப்

வே. சுந்தரம்பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி,


சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளையவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1910. [அணா-2.

16, சரவணப்பெருமாள் முதலிவீதி,

புரசை, சென்னை.

உ

கடவுள் துணை.

அகஸ்தியமகாமுனிவர்
அருளிச்செய்த

# குருநாடிசாஸ்திரம்
## இருநூற்றுமுப்பத்தைந்து.

காப்பு.

ஓங்காரங்கொண்டெழுந்து பிரணவத்தின்செய்கை
யுற்றமிகக்குருத்திரமா யுரைத்தவாறு
ஆங்காரங்கொண்டதோர் மனதைத்தேர்ந்து
அறிவுருவசொரூபமென்று மாந்தர்நேர்மை
பாங்கானநாடிநரம் பானவாறு
பழமறைதானுராய்ந்து பாடிவைத்தேன்
நீங்காதகணபதியுங் கந்தன்றானும்
நிசமாகவந்துதவுங் காப்புத்தானே. (க)

தானானநாடிநரம் பானசெய்கை
தாரணியில்மானிடர்செய் தர்மகர்மம்
ஊனானவுடலுயிராய்த் தேசமான
வுரையறிந்துவுதித்துநின்ற வுண்மைக்கியானம்
வானானநாடிவகைக் கெல்லாந்தன்னில்
வளம்பெறவேயொருநாடி மார்க்கங்கண்டு
தேனானகுருநாடி யாய்ந்துசொன்னேன்
தேவிமுதல்சிவனுடனே தெளிந்தகாப்பே. (உ)

வேறு.

சீர்பெறுமுனிவர்வேதந் தெளிந்துபின் னுலகத்தோர்கள்
பேர்பெறுங்கருவினுற்ற பிணிபலவுணர்ந்துதோய்ந்து
ஊர்பலநாடிக்கெல்லா முயர்பெருநாடிமூன்றில்
சேர்குருநாடிநேர்மை செயலுடன்கூறலுற்றேன். (௩)

உற்றிடுநாடிமூன்றி னுயர்நிலைக்குருவைப்பற்றி
நற்றிடுநரம்பின்செய்கை நன்மணிதாக்குப்போலே
பற்றிடுஞ்சுழினைதாக்கிப் பதிபசுபாசத்துற்று
மற்றுள்ளமண்டலங்கள் மூன்றையுமருவிநீளும் (௪)

நீளுமேவாதபித்த சிலேற்பனமூன்றுமேவி
வாளுமேயாக்கைகோத்து வளர்ந்திடுங்குருவர்நாடி
கோளுமேவிளைந்துநோய்கள் கூடழிவாகச்செய்யும்
நாளுமேநடத்துஞ்செய்கை நவிலுநேநாடிக்கேளே. (௫)
கேளெனச்சொன்னீரையா கிருபைவைத்தடியேன்கேட்கக்
கோளெனமருவிநிற்குஞ் சூட்சத்தைதொட்டுக்காட்டி
ஆளுமாநாடிக்கெல்லா மருள்பெறுங்குருவாநாடி
சூளுமேவகைதானன்றாய்ச் சொல்லிநீர்துலங்குவீரே. (௬)

வாததோற்றம்.

உற்றிடுமூலகத்தோர்க்கு வுறுபலவியாதியெல்லாம்
பற்றிடுங்குணங்கடன்னைப் பகர்ந்துரைசெய்யவேண்டில்
ஒத்திடுஞ்சனனவாறு முடனுயிரானவாறு
மத்திமாமலையில்வாழு மாமுனிவகுத்தார்தாமே. (௭)
தானெனுநாடிபத்தில் தரித்திடுநாடிமூன்றில்
கோனெனுங்குருவாநாடி கருவினில்தரித்துவோங்கி
யூனெனுநிணமுநெய்யு முதிரமுஞ்சலமுமாகித்
தேனெனுந்தெளிவாயாடிச் செயலுடன்கூறலுற்றேன். (௮)
துலக்கவேவேதநாதன் தூண்டினேசுழினைகாட்டிப்
பெலக்கவேயிடைதான்வாதம் பிங்கலைபித்தமாகும்
நலக்கவேசுழிதான்சேத்மம் நலமுடன்வலமேவாதம்
கலக்கிடுநதியேபித்த மையதுநீரதாமே. (௯)
ஆமிந்தப்பூதங்களு மமர்ந்திடுவாதம்வாய்வு
ஓமிந்தப்பித்தந்தேய்வு வுற்றநல்லையந்தன்னில்
வாமிந்தவபானவாத மருவியபிராணன்பித்தம்
தாமிந்தச்சமானன்சேத்மஞ் சாற்றினேன்சாரந்தானே. (௧௦)
சாற்றினேனிவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
தோற்றிடும்வாதத்தாதி சுருதியாய்க்கருவிக்கெல்லாம்
மாத்திரையாகத்தானே வாசல்காப்பதுவேயாகும்
தோற்றிடுதொழிலுக்கெல்லாஞ் சித்துடன்சத்துமாமே. (௧௧)

வாதபித்தம்.

ஆமிந்தநாடிதானு மறிவெழுபத்தீராயிரம்
தாமதுள்நாடிபதனுச் சகலவாதாரமாகி
நாமிந்தநாடியேமாய் நற்றசைதோலெலும்பு
ஓமிந்தாத்தமூளை சுக்கிலமூன்றுமொன்றே. (௧௨)

ஒன்றதாநாடிதானு முடனுயிருணர்வதாகி
நின்றதாம்வாதபித்தஞ் சிலேற்பனமூன்றுமொன்று
ஒன்றையேயுறுப்புத்தோறு முறுபின்னலாகிப்பின்னி
நின்றதேயிடைபிங்கலையாஞ் சுழிமுனைநடுவுமாமே. (௧௩)
சுழிமுனைநடுவாய்நின்ற சிலேற்பனத்தொழிலைக்கேளு
வழிவழியாகப்பித்தஞ் சிலேற்பனநெருக்கும்போது
அழிவதுபித்தநீங்கி வாதத்தைநெருங்-க்கொள்ளும்
பொழியவேவாதஞ்சென்று பிராணனைநெருங்கிக்கொள்ளும். (௧௪)
தள்ளுமேவியானன்சென்று வேரினையலைத்துமோதிப்
புள்ளுமேபழுத்துச்சாய்ந்தாற் போமதுசீவனங்கே
கொள்ளுமேமுன்செய்ததர்ம கர்மத்துக்கீடாய்ச்சாகும்
தெள்ளுமேநாடிகூர்மை யின்னமும்புகலக்கேளே. (௧௫)

வேறு.

ஓகழிந்தவுடலெடுக்குங் குறிப்புச்சொல்வே
னுறுதியாந்தேகமுறி யுப்புதன்னை
வாகழிந்தமண்டலங்கள் மூன்றுக்குள்ளே
மருவிநின்றபதிபசுவும் பாசமாகி
சூகழிந்தபிராணனொடு அபானங்கூடிச்
சுகமானசமானனுமாய் மூன்றுபேரும்
நாகழிந்தவிதங்களிலே யெடுத்துவாக்கை
நயசுகமுந்துக்கமுட னெடுத்தசென்மம். (௧௬)
சென்மமதுசெனித்தவுடன் முப்பாவந்தான்
தீவினைக்குமீடாகிச் சென்மமாகிக்
கன்மமென்றுந்தர்மமென்றுங் கருவிப்புக்கிக்
கலந்துநின்றவன்னியொடு காலுநீரும்
உன்மமெனும்வாதபித்த சிலேற்பனமாகி
யூடுருவிப்பிராணனோ டபானன்றானும்
தன்மமெனுஞ்சமானனுமாய் மூன்றுபேருந்
தாரணியிலபானனுமா யானுமாச்சே. (௧௭)
ஆச்சுதேயபானனது வாய்வுமாச்சு
அதன்மேலேபித்தமது கண்ணேயாகி
வாச்சுதேசிலேத்மமது கபநீராகி
வகைமூன்றுவாழ்நதங்கே[?]தொந்தமாகி
ஏச்சுதேபலபிணியும்[?]பிரளிகணைகபநீர்
எழுந்தபலனோபாகி யீடுமாகி

நாச்சுநாலாயிரத்து நானூற்றுச்சொச்சம்
நவிலுங்குணம்புவியோர்க்கு நாட்டினாரே. (௧௮)
நாட்டினார்வாதத்தி லெழுந்தரோகம்
நலமொடுவாதமொடு வாய்வுகுன்மம்
கூட்டியேயுதிரத்தி லண்டவாய்வு
குடல்சடலவாய்வுபுக் கெழுந்துசுற்றும்
காட்டினார்விஷகடிகள் திமிருநட்சை
காதடைப்புப்புற்றுவகை கிராணிதோஷம்
மூட்டினார்கெர்ப்பத்தைக் கெடுத்தவாய்வு
மூன்றுவகைவிபர மறிந்தவன்வயித்தியனாமே. (௧௯)
ஆற்றவாதபித்தம் சேத்மதொந்த
மதன்விபரவகைதெரிந்து நோய்க்குணமறிந்து
கோதற்றவாதிமகன் வயித்தியமேசெய்யில்
கூறுகண்டுசெந்தூரக் களங்குபற்பம்
தேதற்றதிராவகங்கள் செயநீர்செய்வான்
திறமுடனேநோய்தீர்த்துத் தொக்தஞ்செய்வான்
தாதுற்றபித்தத்தா லெழுந்தரோகஞ்
சாற்றுகிறேன்கருவறிந்து சார்ந்துபாரே. (௨0)

கற்பத்தினால் பிறக்கும் விபரம்.

பாரிந்தபித்தத்தா லெழுந்தரோகம்
பதமுடையகணையாலே யெலும்பைச்சார்ந்து
நேரிந்தசிரச்சூலை சோகைபாண்டு
நெற்றியின்கண்ணோயை நெடும்பாடோடே
சீரிந்தகிறுகிறுப்பு வுழலைதாகம்
கிராணியொடுபிரமேகம் கிருமிதோஷம்
சாரிந்தவுள்ரோகம் வெட்டைசூடு
சலக்கடுப்புமூளைமூலம் பவுத்திரமுந்தானே. (௨௧)
தானென்றகபத்தாலே யெழுந்தரோகஞ்
சாற்றக்கேள்சிலேத்மமென்னுந் தொண்ணூற்றாறும்
தேனென்றவிருமலொடு ஈளைகாசம்
சிரரோகங்கிரணிகங்கள் மண்டைரோகஞ்சூலை
ஊனென்றவாய்வலிப்பு மூக்குநீர்காள்
உற்றசயங்கண்ணினீர் புல்லங்காசம்
வானென்றமண்டையிலே யனேகமுண்டு
வகைவிபரம்மூன்றுமே வகுத்ததாமே. (௨௨)

### வாதபித்த சிலேத்பனம்.

வருத்தவொருவாதத்திற் பித்தங்கூடில்
வாயுவொருசிரச்சூலை வழக்கமாகும்
மிருத்தவொருபித்தத்தில் சேர்ந்தவாய்வு
வேகமுள்ளசலக்கழிச்ச லிரைச்சல்வாய்வு
எருத்தமிகுவாதமொடு காந்தல்குத்து
இளம்பிள்ளைவாதமொடு காந்தல்குத்து
சைத்தியமுமிருமல்சயஞ் சன்னிவாதம்
தலைதனிலேபலதோஷஞ் சாருந்தானே. (௨௩)

தானென்றவாதபித்த சிலேத்பனந்தான்
தலங்களிலேதொங்கித்தால் கூறுகண்டு
வானென்றமூவரினாற் றொந்தமேறி
வருங்குணத்தையாராய்ந்துணர்ந்து மனதிற்கண்டு
பானென்றவமிழ்தத்தின் பதங்கள்கண்டு
பார்ப்பவனேவயித்தியனும் பாருபாரு
தேனென்றநாடிகண்டு குணமுங்கண்டு
தெளிந்துணர்ந்துசெய்கைகண்டு செய்துபாரே! (௨௪)

பார்க்கையிலேபிணியதனை யறிந்தாயானால்
பரிவானமருந்தினுக்குப் பிணிதான்நீரும்
நோக்கையிலேபிணியதனை யறியாவிட்டால்
நோய்தீரமாட்டாது மருந்தேறாது
தாக்கையிலேகுருவினிட மனதுநொந்தால்
சண்டாளனாகியவன் தவறிப்போவான்
சேர்க்கையிலேகுருவுக்கு மனந்தான்மிக்க
செய்தவனேவயித்தியனுந் தெளிந்துபாரே. (௨௫)

பார்க்கையிலேசெனனமெடுத் தாக்கையாலென்
பதியவர்முன்செய்த தர்மகர்மம்
ஏற்கையிலேபெண்ணோடு புருஷன்சேரி
லிக்காயநிலைக்குகன்றே புரியட்டகத்தூடு
காக்கையிலேயிடகலைக்குச் சோடசமேபாயுந்
திறமுடனேயுடலுயிரா முறுதியாமே. (௨௬)

ஆமிதுவேசுக்கிலமே பெருத்ததானால்
ஆணுகுமதுகுறைந்து சுரோணிதந்தான்மீறில்

ஓமிதுவேபெண்ணுருகுமுறுதியாக
  ஓகோகோமுன்செய்த கன்மத்தாலே
பூமிதுவேநோய்களெல்லாம் பூண்டுக்கொண்டு
  புகுந்துணர்ந்துபிறப்பிறப்பு பூணுங்காயம்
நாமிதுவேகருக்குருவு முவந்தநேர்மை
  நாடறியவெல்லார்க்கும் நவின்றவாறே. (௨௭)
வாறுகேள்மடலான செய்கைதானும்
  வகைவிபரமுன்செய்த கன்மத்தாலே
கூறுடனேயெறிகலையாற் கிருமியாலும்
  கொஞ்சியதுவாயுவுடன் கலைத்திரவிமீறி
வீறுடனேவெட்டையினாற் பசியினாலும்
  வேறுடனேகர்ப்பமது வழிந்துபோகும்
வாறுடனேமடலாகுங் கர்மத்தாலே
  வந்தவகையிதுவென்ன வகுத்தார்தாமே (௨௮)
தானங்கேசுக்கிலந்தா னறுகுநனிப்பனிபோல்
  தங்கியதுபதினைந்தில் பலத்துக்காணும்
ஏனங்கேயிருபத்து ஐந்தாநாளில்
  இயல்புடனோர்திங்கள் தனிற் றலையுண்டாகும்
வானங்கேரண்டுதிங்க ளிற் றுமுடிவாகும்
  வளர்மூன்றுதிங்கள்கை காலுண்டாகும்
வேனங்கேயைந்தாறில் விரல்நகங்கள்தோன்றும்
  வேதாந்தம்பிண்டம்வளர் விபரமதுதானே. (௨௯)
தானேதானன்னையுண்ட வன்னமுந்தண்ணீருஞ்
  சாந்தமாய்த்தொப்புள்கொடி யூடேபுக்கி
பானரசவமுதமெனச் சேயுந்தோற்றும்
  பாங்குடனேழுமாதங் குடலுதிரஞ்சேரும்
மானேகேளிந்தவகை வளர்த்தியான
  வகைவிபரநன்றாக மானிடர்க்கு
வானவர்கள்முனிதேவர் கிருபையாலே
  மதலையுருவானவகை மாதஞ்சேரே. (௩௰)

வேறு.

சேருமேயெட்டாமாதந் திறமுடன்சிறந்துமோதி
ஊருமேயுண்பதானு லுள்ளறிவுவுண்டாமப்பால்
காருமேயொன்பதானுற் கருணையாம்பத்தில்நாடும்
சேருமேபத்தாமாதம் பூமியிற்றொழுதுவீழும், (௩௧)

தொழுதுடன்வீழ்ந்தபோது தத்துவந்தொண்ணூற்றுறு
முழுதுடன்யாக்கையாகி முற்றுமேநரம்புநாடி
பழுவுறுதசையெலும்புத் தாதுவும்பதிவாயொத்து
கொளுமதுதேகந்தன்னிற்கூறுநானுரைக்கக்கேளே. (௧௨)

நாடிநிலையறிய.

கோட்டிடுநாடிதானு மிருநூற்றுநாற்பத்தைந்தில்
நாட்டிடுநாடிபத்து நயம்பெறுமேழுதானு
மூட்டிடுபஞ்சநாடி முற்றுமேபார்க்கும்போது
சாட்டிடுநாடிதானு மூன்றெனச்சாற்றலாமே. (௧௩)
சாற்றுறேனிடையேவாதம் பிங்கலைபித்தமாகும்
தேற்றுறேனசுழினைதானுஞ் சிலேத்பனமென்னலாகும்
மாற்றுமேறன்வலமேவாதம் வளர்ந்திடும்பித்தந்தீயாம்
போற்றுமேறனையந்தண்ணீர் பொருந்திடுமபானன்வாதம். (௧௪)
வாதமொன்றுரைத்தபின்பு மருவியபிராணன்பித்தம்
சாதமென்றுரைற்தசிலேத்பனஞ் சமானனுநோயதாகும்
போதமென்றவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
வேதமென்றுரைத்தசெய்கை விளம்பினேன்புவியில்மாதே. (௧௫)
மாதவர்முனிவர்தேவர் வளர்ந்திடும்வானத்தோர்கள்
வேதவர்பத்தர்சித்த ரிருடிகண்மேல்நோய்சாராது
பாதகர்பிறவியெல்லா நோய்தணிந்தழுந்திமாள்வார்
காதலால்யோனியாசைத் தீமையாலிறப்பர்தாமே. (௧௬)
தாமதுசுவைகளாகுந் தருக்கியபோகத்தாலும்
போமதுபிறந்திறந்து புகுந்திடுநோய்க்கூட்டுக்குள்ளே
சோமதுகாமத்தாலே செனித்திடும்பிண்டசென்மம்
நாமிதுவறியச்சொன்னோ நாடிநீதெளிந்துதேரே. (௧௭)
சேறுவீர்கற்பங்கொண்டு சிதம்பரபூசைசெய்து
தாறுநீசத்திபூசை வைரவன்வீரவாகு
வேறுநீகணேசன்கந்தன் சிறப்புடனிவர்கள்பூசை
வேறுகேளுரைத்தமுன்னூ லாய்ந்துமேசெய்யதன்றே. (௧௮)

௪௪௪௮-வியாதி தொகுப்புப்பெயர்கள்.

நன்றெனவியாதிதானு நவிலுமேறுகமத்தில்
குன்றெனவளர்ந்தநோய்கள் சகலமுந்தொகையாய்ச்சொல்வேன்
அன்றெனவெழுந்தநாடி யெழுபத்தீராயிரந்தான்
கன்றெனநாடிபத்துக் கருத்துறுமேழுகாது. (௧௯)

தானேபஞ்சபூத மதிலுறுநாடிமூன்று
கோதனுகுருவாநாடி குறிப்புடன்மேனின்று
தாதுறுசத்தந்தாது தசைநாம்பெலும்புதானும்
வேதுறுரோமபச்சை சுக்கிலநெய்யாப்பித்தம். (௪௰)

பித்தநாற்பத்துநான்கு பெருவயிறெட்டதாகும்
உற்றதோர்பீலியெட்டு மோசியமூன்றதாகு
மெத்தவேசிலேற்பனந்தான் மிகுத்திடுந்தொண்ணூற்றொரு
மற்றுமேவாதரோகம் வகையுமெண்பத்துநாலே (௪௧)

சன்னியும்பதினெட்டாகுந் தான்வலிநேத்திரந்தான்
உன்னியதொண்ணூற்றாறு முழுவையுமூன்றதாகு
மின்னியபக்கசூலை மேவிடுமேழதாகும்
சென்னியில்வீக்கந்தானுஞ் சேர்ந்திடுமைந்ததாமே. (௪௨)

பிளவையில்சிலந்திதானும் பெருந்துடனைம்பதாகும்
அளவிலாச்சுரமேகேளு மறுபத்துநாலதாகும்
களமிகப்படுத்தும்பாண்டு தானுமேயஞ்சதாகும்
இளகியகுன்மமெட்டு மேந்தியவிக்கலாமே. (௪௩)

இந்திரகோபதோஷ மிருபதுமெழுபத்தாறும்
அந்திரவாயுசங்கை யாயிரத்தெட்டேயாகும்
தந்திரப்பார்வைதோஷந் தானுமேநூறதாகும்
மந்திரக்குமிழியெட்டு மகோதரமீரெட்டாமே. (௪௪)

படுவன்முப்பத்திரண்டு பருவொருநாற்பத்தொன்று
முடுகிடும்விஷபமாறு முற்றுமேபவுசிமூன்றாக
திடுகிடுப்பீலிமூன்று சிரசினிற்சிலந்திசொல்லில்
கடுகிடுமைம்பத்தாறு கரப்பானுமெண்பத்தைந்தே. (௪௫)

திருக்குநோயென்பதாகுந் திரளும்விப்புருதிபத்தாம்
மருக்கவேகிராணிதோஷ மாறுமேயிருபத்தொன்று
மிருக்கிடும்பிளவைதானு மேழுமிவையேசொல்லில்
கருக்கிந்ததோஷந்தானுங் கண்ணுமேநாற்பத்தாறே. (௪௬)

குட்டமும்பதினெட்டாகுங் குறைநோவுமெட்டதாகும்
திட்டமாஞ்சூலையெட்டுச் சித்தியலாறதாகுந்
தட்டுநீரிழிவுசொன்னோந் தானுமேயிருபத்தொன்றும்
சிட்டமாம்விஷமைந்துஞ் சேருங்காமாலையாறே. (௪௭)

மோகமுமிருபத்தொன்று* மிகுயோனிச்சூலையெட்டுந்
தாகமுமாறதாகுந் தனிரத்தபித்தமூன்றுந்

சோகையுமூன்றதாகுஞ் சூசிகாவாயுபத்தும்
ஆகத்தில்வீக்கமொன்பா னரையாப்புமூன்றதாமே. (௪௮)
ஆனதோர்நரம்புரோக மாயிரத்தொருநூறென்னும்
ஈனமாங்குந்திரந்தா னுமிருபதுபன்னிரண்டு
தானமாந்தண்டில்ரோகந் தானொருமூன்றதாகும்
கானமாங்குழலினூனே கசரோகமூன்றதாமே (௪௯)
ஊனும்பினிற்பத்துரோக மீன்றொன்பதென்றுசொல்லுங்
கலந்தமேபெருவயிற்றில் கலந்திடுநூறெட்டென்னுங்
குலுங்குமேதலைநோக்காடு குறித்திடுமைம்பத்தொன்பான்
கலங்குசேர்தலையின்மூளை நாற்பதுரோகந்தானே. (௫௰)
மூன்றுமேயுகரரோக நூற்றெட்டுநாற்பத்தென்னும்
பற்றிபநாக்கில்ரோகம் பன்னிரண்டாகுமென்னச்
சுற்றியகண்டமாலை சொல்லியதெட்டதாகும்
மற்றுமாநேத்திரரோக மைந்திடநாலதாமே. (௫௧)

காதினில்விபாதிகளுங் கருதிடுமிருபத்தெட்டும்
மார்பினில்கோவைத்தாகு மற்றொருநாலதாகும்
மாதியாநெற்றிரோக மஞ்சனுமேழீரண்டு
சோதியேயுதிரமண்டெலி சொற்படியீரண்டதாமே. (௫௨)

புண்ணினிற்சன்னியைந்து பொருந்தியவாழ்நீரைந்து
கண்ணிபநாசிரோக நாலொடுமூன்றுமென்னத்
திண்ணியவாதபெட்டிஞ் சிரங்கணைநாலதாகும்
பண்ணியரோகஞ்சூழ்ந்து பாரிக்கும்வாறதாமே. (௫௩)

காயாச்சுவாசமைந்து கதித்திடும்பவுத்திரமெட்டு
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே
சாயமுங்குட்டச்சிலந்தி தானொருமூன்றதாகும்
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே. (௫௪)

தேகத்தில்கழிச்சலைந்து திகழ்மூலைகுத்தாவும்
வகுத்தினில்புழுவேகேளு வளர்ந்திடுமிருபதென்ன
மெகத்திடுமூச்சுவாத மெய்யதேநாலாமென்ன
பகைத்திடுபதமிரண்டு பாய்ந்தபீநசமூனாலே. (௫௫)

மூத்திரக்கழிச்சல்நாலு மூத்தாரீரண்டப்புநாலு
மாத்திரைப்பாதசக்கரம் வந்திடுநாலாமென்னச்
சாத்திரப்படியேசொன்னோன் தந்தத்தில்வாயுவெட்டு
சூத்திரப்படியேயண்ட வாயுவ்வேழதாமே. (௫௬)

மாந்தமுமெட்டதாகு மயக்கிடுமூர்ச்சையாகும்
சேர்ந்திடும்பிள்ளைதோஷஞ் செப்பிடில்நாற்றெட்டாகும்
வளர்ந்திடுமடந்தாப்வாத சுரோணிதமேழதாகும்
தாழ்ந்திடுங்கன்னரோகந் தானொருநாலைந்தயாகும். (௫௭)
அட்டையின்கடியின்மூன்று மானையின்கடிகள்மூன்று
நட்டுவக்காலிரண்டு நல்லதோர்விஷமூனாறு
கட்டிடுஞ்செந்தாமதானுந் தாக்கிடும்விஷமுமைந்து
மிஷ்டமாமெலிவிஷங்க ளீரொன்பதென்றுசொல்லும். (௫௮)

வேறு.

சௌக்கடிவிஷமூன்று சேர்ந்தமாலையின்விஷமஞ்சு
நாளாம்பல்லிவிஷமொன்றாகு நலமாங்கருவாய்விஷமூன்று
கௌவெறும்புவிஷமைந்து பெருவாரக்கடிமூன்று
தேளாஞ்சுந்தரிவிஷமூன்று திரிக்கபுலிவிஷமைந்தாமே. (௫௯)

வேறு.

எரிபுலிகடியேயெட்டு ஏனத்தின்விஷமிரண்டு
கரிபுலிக்கடிதானுங் கடித்திடும்விஷமிரண்டு
பரிவுள்ளகுரங்குமந்திப் பலகடிவிஷமூன்று
விரிவுளசிருபாம்புதானு மேவிடும்விஷமூன்றே (௬௰)
பூனையின்கடிகளிரண்டு பேய்கரிவிஷமிரண்டு
சேனையிலுயுத்தஞ்செய்து தெறித்திடுங்குண்டுகாயம்
மானையேவென்றகண்ணாய் வல்லயக்குத்துக்காயம்
மீனையேசேலியொன்று விலாக்குத்தொன்றதாமே. (௬௧)
பீரங்கிக்குண்டுக்காயம் பெரியதோர்குத்துக்காயம்
கூரம்புபட்டகாயங் குலைப்படுவெட்டுக்காயம்
பாரங்கமணலிறசெனறு பறைறெபறக்குடலைப்பீறி
சூரங்கள்பண்ணிப்பீறிச் சூரிபல்வகுத்தகாயம் (௬௨)
இப்படிமூக்கல்லிப்பு கழிக்குமைந்நூற்றும்வகையாய்ச்சொன்னேன்
செப்பிடியபழிக்குச்செய்யி லவலைகாலமிருந்தான்
ஒப்படிநாடிதானுங் குணங்களும்வருகுப்வாறுஞ்
மைசப்படிகண்டுகொள்ளத் திருவுளமருளிச்செய்தார். (௬௩)
நாடிதாண்மயம்பக்கேளீர் நயமுடனறிந்தபின்பு
வாடியமண்ணானோர்க்கு வருமின்னைவியாதியாகிக்
காடியவியாதிதனுக் கதித்திடுங்கடினஞ்செய்யும்
கூடியவுலகோர்செய்கை தெகுத்துநானுரைக்கிறேனே (௬௪)

உற்றதோருடலிற்கூறி உறுப்புடன்விரவிநின்று
முற்றுமேநோய்களெல்லா முதிர்பெறத்தோன்றும்பே
பற்றுமேலாதபித்த சிலேற்பனத்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்று பகர்ந்தனர்முனிவர்தானே. (௬௫)

குருநாடி.

கூறுவார்வேதநாதன் குருநாடிநேர்மையெல்லாம்
வீறுசெய்யுடலில்வாத பித்தமேகமேற்பனமூன்று
மாறுகண்டறியுமன்னம் வழுவாதநாடியொன்று
பேறுகொண்டெழுந்தநேர்மை பிரித்துடனுரைத்தார்மேலோர். (௬௬)

ஓருயிரைச்சேர்ந்தவுடலிடையடைபத்தோற்றி
ஓரெழுத்தீராயிரநாடியேயிசைந்துபின்னும்
கார்செறிமேகம்போலே கதிர்த்தடம்வியாதியெல்லாம்
பேருகொண்டெழுந்தநேர்மை பிரிதியாய்க்கேழ்க்கின்றேனே. (௬௭)

கேட்பதோர்வசனந்தன்னைக் கிருபைவைத்தடியார்க்கின்னம்
தாப்புரவாககட்டெல்லாந் தனித்தனிகுணம்வெவ்வேறு
கூப்புறவின்னதென்று குருவருள்செய்யவேவேண்டும்
ஆர்ப்பனைதெளித்துநன்றா யருளுசெய்வீரமரர்கோவே. (௬௮)

வேறு.

கணுவதோர்பிணிகள்வந்தவகைதானேது
நாடியைந்திருந்தவிதமடுத்தானேது
அணுகியிருந்தெழுந்துவரும்வகைதானேது
ஆகவொருமுடிப்பிருந்ததலந்தானேது
பணிதியொடுவேறிருந்தபதிதானேது
பார்வைகுருடானபின்புவிருள்தானேது
தணிவுடனேபொருளிதனைக்குறித்துச்சால்வீர்
சண்டாளப்பிணிகள்வந்ததலத்தைத்கூறே. (௬௯)

கணுகியதோர்பிணிகள்வந்தவகையேதென்னில்
நாடிவெகுப்புசிப்பருந்தல்நயத்தினாலே
சிறுகுபெருந்தாபமறும்பிணிகள்மீறும்
திணமரிக்குதின்பிராயில்பிணியேயாயில்லை
கொணுதுடனேஸ்திரீபோகஞ்செல்வீராகில்
கொடியபிணிபிதுகிவரும்துறையுந்தந்து

வணிவறிந்துபொசிப்பருந்திப்போகஞ்செய்தால்
  வல்பிணிகளவரிடத்தில்வாராதெனறே. (எ0)

நாடியிசைந்திருந்தவிடந்தசைநீர்கூடி
  நாட்டமிடைபின்கலையுஞ்சுழிலையும்பற்றி
தேடுபுன்றறீயொடுகாற்றுங்கூடிச்
  சேர்பித்தவாதமெனச்சேருமூவர்
ஆடியதோர்மாலயனுமாகுமப்படியே
  வாதபித்தசிலேற்பனமூம்நேர்மையாடும்
ஓடிவருங்கரங்கடன்னிலுறுதியாக
  வுற்றுநிற்குநாடியொன்றுகந்துபாரே. (எக)

மூலமுதலாதாரமாறுஞ்சுற்றி
  மூாத்தினின்றபரவெளியில்தன்மையாகி
பாலமிதுமீதேறிச்சுழிலையூதி
  பாதாளகாடியங்கிபதியும்வேறு
காலமதுவரும்போதுகவருப்விசம்
  கத்திரிக்காய்போனருக்குங்காலைப்பற்றி
சீலமுடனெடுக்கம்வருங்காலந்தன்னில்
  தெசவாயுபாரித்துஅலைக்கும்வேரை. (எஉ)

அய்யாறுமாறுமங்கேயசைந்துபேர்ந்து
  அண்டபகிரண்டமெல்லாமதிர்ந்துசாய்ந்து
மெய்யாறுதட்டுமங்கேபிடிந்துவீழும்
  வேரிளகிப்போம்போதுபிராணன்போகும்
பய்யாறும்பரவெளியுமிரண்டுபோகும்
  பரமனூரங்கிருந்துபசுரும்போது
வெய்யேறுபுரவியும்போமிருளுமாளும்
  வேரிழைத்தவகையிலென்றவிளம்பலாமே. (எங)

விளம்பலாம்வேரிருந்ததளத்தினூடே
  மேவினின்றபரவெளியிற்சமானமானத்
தளம்பெறவேகட்டிவைத்தமடிப்புமங்கே
  சற்குருவின்வைப்பெடுத்தகலமுமங்கே
வளம்பெறவேவேரிருந்தவிடத்தைக்கண்டால்
  மன்னுகுருபரனருளேமருவுங்காலம்
மளம்பாசபசுபதியுமொன்றுங்காலம்
  மார்க்கண்டநாதனென்றுவகுக்கலாமே. (எச

வேறு.

விளம்புகிறவிபரமாக வினவியகிரந்தத்தாலே
வளம்பெறுபுட்பாவத்தால் மறுவியபிணிகள் தீரும்
உளம்பெயனாத்தாற்றிக்கை உயர்பெரும்பெரியோர்தன்மை
களம்பெறுதிக்கைசெய்ன்றற் சார்ந்திடும்பிணிகடானே. (௧௫)
குருவருள்விட்டுச்சென்று குவலயத்துள்ளமாந்தர்
திருவுளமணதிறந்துக் திருந்திடுபேரண்டத்தைக்கொண்டு
கருவினையறியாமூடர் கற்றோறைத்தூஷணித்தல்
குருவினைநிந்தைசொல்லக் கொடும்பிணிபாலேமாள்வாய். (௧௬)
கற்றதோர்வித்தைபோச்சு கருத்ததுமயங்கிப்பின்னும்
உற்றதோர்வரமையாவி யுறுகுளோர்தனைத்தப்போசி
பித்தமுபயிராமலேகொண்டு பெருலகமனிற்சென்று
சித்தமுந்தெளிவுமாறித் திருவிளிற்கிடப்பார்தானே. (௧௭)
குருவினைவணக்கஞ்செய்து கோணறப்பொருளையீந்து
இருவினையறுக்கவேண்டி யெனைக்குருதெய்வமென்று
ஒருவனுங்குருவையெண்ணி யுற்றனகொள்ளும்போது
அருவினையகன்றுநீங்கி யவுலகடைவர்தானே. (௧௮)
என்றதோர்சொல்லைக்கேட்டு மின்னமும்பயம்பவேண்டும்
நன்றுதானடியேனென்று நவிலுலகுள்ளோர்க்கெல்லாம்
குன்றுபோலெழுந்தரோகங் குலைந்திடவகைதான்
கன்றுதான்பசுவைத்தேடிச் சருதிடுமார்க்கஞ்சொல்லே. (௧௯)

வேறு.

நாடியென்றுஞ்சநாடிபத்துண்டாகும்
நலமுடனேயோர்விதனுக்கைத்துகானும்.
கூடியங்கேசுளிராலுங்குவிந்துநிறதும்
குறிப்பறிவொருநாடிகுசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்துடன்றுக்குள்ளே
அதனுடையஆட்சநிலைவாதவீட்டில்
சாடிநிற்குமூவிரலும்முருவிப்பாய்ந்து
சாதகமாய்நிற்குநிலைதன்னைப்பாரே. (௧)
மூலமுதலாதாரமாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபாவெளியில்முனையினூடே
பாலமெனும்மேதிறித்திரினைபற்றிப்
பதித்துநிற்குஞ்சத்திக்காய்ப்பால்போல

சீலமுடன் தசநாடிப் பத்துமொன்றாய்ச்
    சேர்ந்துநிற்கு நாடிநிலை தேர்ந்துபாக்கின்
ஞாலமதி லின்னதென் றறியலாகும்
    நாதாந்தகுருவருளை நாடிப்பாரே. (௮௧)

அணுகிவரும் பிணியேதென் றறியவேண்டி
    லாதாரமென் றசொருசிரசில்வெரு
பணுகியேயிரவிட வகுப்புதன்னில்
    பற்றியதோர் வாதிகுல் பதியும்நோய்கள்
மணுகியேமூலமதில் குடவிற்பற்றி
    மருவியதோர் வேவுகொண்டால் பிணிதான்மீறும்
நணுகியதோர் வாதபித்த சிலேற்பணத்தாலே
    நலின்றறுணமிம்மூன்றல் நாடுங்காணே. (௮௨)

தண்ணீரால் நெருப்பதனாற் கணத்திறலுஞ்
    சார்ந்தபிணியின்னதென நம்பிப்பார்க்க
உண்ணீரால் முதநிலை கனைச்சார்ந்த
    யுற்றுநிற்குஞ் சிலேற்பனந்தா னுறுதியாக
இண்ணீராற் கூர்மமென்ற ஈரல்தன்னில்
    இசைந்துநிற்கும் பித்தத்தின் சுரங்கள்சூலை
பண்ணீரால் மூலமென்ற குகத்தைப்பற்றிப்
    பரவியேநிற்குமது வாவுமாமே. (௮௩)

ஆதாரமானுக்கும் நடுவேநின்ற
    வப்பற்றி ஆலம்புருடநாடியங்கேயசைய
கேதாரமூலத்தே யிருந்தநாதங்
    கிளர்ந்துமெள்ள வூடுருவியேமேலேசென்று
பாதாரவிந்தமங்கே சுழுனைதாக்கிப்
    பற்றிநின்ற தசவாயுவொன்றாய்ச்சேர்ந்து
சூதானவீடுதான் தன்னிற்சென்று
    சூட்சநிலைநின்றவிடமுடிச்சதாமே. (௮௪)

முடிச்சென்றதாமெல்லா மடமிற்சுற்றி
    மும்மண்டலங்களுக்கு முதலாய்நின்று
துடிச்சவனைகபிராணனேடபானன்றானுந்
    தோன்றிமேலாதார மாறுஞ்சுற்றி
வடிச்சிநின்றவாய்வங்கேயபானன்பற்றி
    மார்க்கமதுபலவிதமா யலைக்கும்வேளை

தடுத்திருந்தபிராணனங்கே யேகுமென்று
சாற்றினர்மலைமுனிவர் தரணியோர்க்கே (அடு)

வாதமிருந்தெழுந்துவரும் வகைதானேது
வரிசையுடன்தானதிலே வகைதானேது
பேதமுடன்பயித்தியங்கள் பிறந்ததேது
பிரமேகநீர்க்கடுப்புப் பொருள்தானேது
தாதுவருஞ்சயித்தியங்கள் பிறந்ததேது
சாதுரியமகாதோஷம் வாய்த்ததேது
ஓதிவெகுசாத்திரங்கள் படிக்கும்பேரை
யுறுதியுடன்பொருளிதென் றுரைத்தான்சொல்லே. (அசு)

வாதபித்தத்துக்கு விபரம்.

வன்னியொடுகாலகுடிமண்ணைச்சார்ந்தால்
வாதமிகுமண்மிஞ்சயில் வாயுமீறும்
திண்ணமுடன்வானதிலே காற்றுந்தீயும்
சேர்ந்திடிமேல்பித்தமிகுஞ்சிரைப்பாரு
உன்னிஎழுசிலேற்பனந்தான் தண்ணீர்காற்று
உறுதியுடன்சுழுமுனையி லுற்றுவாங்கும்
சென்னிபருள்புகழ்படைத்த முனிவன்சொன்ன
சித்தாந்தமதாகவிதெளிந்துகொள்ளே. (அஎ)

வேறு.

சுழுனையும்பிராணன்தானுஞ் சுழன்றுதான்கலையைச்சாரில்
நளினமாந்தாதுவிட்டு நற்சயிறுகவீசும்
கொளுமுனைபோலேகம்ப மெழுகடலுச்சியேறில்
சுழுனையந்தானின்ற மார்க்கமென்றறிந்திட்டாயே. (அஅ)

இருகரங்கால்பெறுத்து வுறுப்புகள்தன்னிற்சேர்ந்து
பருவமாம்பிராணவாயு பற்றியேயிடையுங்கூடிக்
குருவெனப்பணிந்துபாணி தன்னையுமேற்கொண்டேதான்
மருகியசிலேற்பனசீதம் வருமெனவருக்கலாமே. (அகூ)

அக்கியவுள்ளநாடியபானனுடொத்துவாங்கில்
புக்கியமலசலாதி போக்கியமாகநின்று
வெக்கியமந்தானு மிருந்திடுபசியினாலும்
அக்கினியெழுந்தபித்தம் வளர்ந்திடும்வகையிதாமே. (கூய)

## சன்னிப்பிறக்கும் விபரம் வேறு.

சன்னியிருந்தெழுந்துவருந் தலந்தானேது
தாதுவிழுந்தெழுந்திருந்த தன்மையேது
உன்னியொருசுரமிருந்த வகைதானேது
உட்காச்சல்பிரமேக வுகமையேது
பொன்னியொருபருப்பிளவை புடைத்ததேது
புகையிருந்துசலமிருந்த பொருள்தானேது
இன்னதெனப்பண்டிதரே வகைதானைந்து
இயம்புவீரிப்பொருளை யியம்புவீரே. (௯௧)

சன்னியிருந்தெழுந்தவமை விபரமென்னில்
சாரமுடன்சிங்குவைதான் மூலஞ்சேரில்
வன்னியொருதண்ணீரும் வாயுங்கூடி
வழுதசிங்குவையகமோ டொத்துச்சார்ந்து
பின்னியெழுந்திடுவதுதான் சன்னியாகும்
பிரிவுடனேகாந்தாரி சுழுனைப்பற்றித்
தன்னிலதுதணலெழும்பித் தாதுவிழுமுஞ்
சடத்துக்குப்பலங்குறையுந் தாதுதானே. (௯௨)

ஏற்றமுள்ளவிடைநாடி கலையுஞ்சேர்ந்து
ஈடானவிஷநரம்பு தன்னைச்சாரில்
வாய்த்தவுடன்மாங்கிஷத்தில் வேவுகண்டு
வகையானவிஷநரம்பு மடங்கும்போது
சித்தமுடன்பவுப்பிளவை யுடைத்துப்போகும்
திறமானவிஷநரம்பில் தமருமுண்டாய்
சாத்தமுடல்சீயுமரத்தஞ் சலவுமேவுஞ்
சங்கையில்லாவெகுவாறு சலமும்போமே. (௯௩)

## சூலைவருங்குறி.

நாடியிருந்திருந்தவிஷ நீர்தான்கூடி
நாட்டமிடபிங்கலையுஞ் சுழுனையும்பற்றித்
தேடியதோர்புரைதீயுங் காற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமென்று சேருமேவர்
ஆடியதோர்மார்லயனு மரணமாகு
மப்படியேவாதபித்த சிலேற்பனநேர்மை
ஓடிவருங்கபமென்னி லுறுதியாக
உற்றுறிற்குநாடியொன்று வுகந்துபாரே. (௯௪)

## சயரோகம்.

மாயமாய்ச்சயரோகம் வரும்வாற்றது
மாற்றுமொருபீசனங்கள் வகைதானேது

வியனுகச்சூலையிருந் தெழுந்தபோது
வீறுடனேநீர்ச்செறிப்பு விதனமேறு
பயமாகக்கனவுநினை வுற்றதேது
பார்த்திருக்கக்குணமெழுந்த பகைதானேது
நயமாகப்பொருளதென் னும் வகைதானேது
நன்மையுடன்பண்டிதரே நடுவதனைச்சொல்லே. (௩௫)

சயரோகமெழுந்தவகை சொல்லக்கேளீர்
தலைதனிலேகனலெழும்பி நீர்தான்வற்றி
மயமாகவிருபுறமுந் தமருண்டாகி
மதுரமென் னும்ருசியறிந்து வாய்நீரூறிச்
சுயமாகமண்டையில் நீரிறங்கச்
சுவாசமதுநெஞ்சில்வந்து கதறியோங்கும்
நயமறியச்சயரோகம் நடுங்குங்காலை
நன்மையுடன்பண்டிதரே நாடிப்பாரே. (௩௬)

பீனசந்தான்வராறு பொருளேதென்னில்
பேதமுற்றகனலெழுந்து வாயுசேர்ந்து
ஊனுருவிமண்டையிலே டொக்குப்பட்டு
உறுதியுடன்வாயுவங்கே யொத்துப்பின்னும்
பீனமுடனெருநீருஞ் சீயும்ரத்தம்
பிடித்துவருங்காற்றோடு மூக்கினோடு
கானுருவிவந்ததுபோல் சலங்கலங்கிக்
காயவிழும்பீனசத்தின் செய்கைதானே. (௩௭)

சூலை.

சூலைவரும்வாறதனைச் சொல்லக்கேளுஞ்
சுற்றியதோர்விசைநரம்பில் வேவுகண்டு
காலையுமேயூடுருவித் தமர்தான்விம்மிக்
களிப்பதுபோல்மாசுபற்ற யிரத்தம்வற்றி
மாலையதுபோல்தொடுத்து நரம்பின்மீதே
வளையானவிசைநரம்பை மடக்கிக்கொள்ளும்
கோலையிட்டகுருடரைப்போல் தட்டழிந்து
குடிகெடுக்குஞ்சூலையது குறிகண்டீரே. (௩௮)

குன்மம்.

குன்மந்தானெழும்பும் விபரமென்னில்
குடல்தனிலேகல்லுமிக நெல்லுமூக்கும்
பின்னமுடன்வயிறுப்பிச் சோரைச்சார்ந்தால்
புரளுவதுகுடலோடே மாடுபற்றும்
அன்னமதுசெரிக்காது மாசினாலே
அதுவுபரம்வுமிழக்குக் கிருமிபுக்கும்
வன்னமலக்குயிலாளே குன்மரோகம்
மாசற்றால்குன்மமறு வகைதான்பாரே. (௩௯)

சீர்பெறவேவீரிழிவு திரந்தானேது
 சேர்க்கையுடன்தொரகத்தில் வியாதியேது
பாரறியக்கனுமியினாற் புழுக்களேது
 பண்புடனேவாதங்கள் பகைத்ததேது
பேர்பெறவேமூலத்தின் கடுப்புமேது
 பிலமாகக்காமாலை பாண்டுவேது
கூர்பெறவேகுறிபபறிந்து சொல்வீரென்னக்
 கோமானேயிதுபொருளைக் கூறுவீரே. (௰)

சங்கையில்லாத்திரீபோகஞ் சார்ந்தயோசை
 தானுருவியஸ்தியிலே தொங்கிப்பின்னை
பொங்கியதுவூனுருவித் தசையைச்சார்ந்தால்
 புரைசித்துநாதமெல்லாம் பிரமைகெட்டு
கங்குலித்தபுழுப்போலே தேகமெல்லாங்
 காரியங்கேளுள்ளுலர்ந்து கார்போல்நீரைப்
பங்கிலங்கேவுரியிட்ட நீரையெல்லாம்
 பாழானவிஷநரம்பைப் பற்றிச்சாயம். (௰௧)

ஸ்திரீபோகஞ்செய்ததினால் வேவுகொண்டு
 சிரசுமட்டும்வெந்துருகக் கனலேமீறிக்
குறியுடனேமேகந்தான் கொடுமைசெய்து
 குறைந்துவருந்தாதுவெல்லாங் குன்றிப்போகும்
நெறியுடனேபால்நெய்க ளிறைச்சிமீன்தான்
 நெய்ச்செத்தால்மிகுதிகொண்டால் நெருங்குமேகம்
அறிவுடனேதயிருமா மிசங்கடானு
 மடிக்கடியுண்பதுவு மேகந்தானே. (௰௨)

சாகைவராறதனைச் சாற்றக்கேளு
 தருசுரத்தில்வாய்வெழும்பி யீரல்வெந்து
ஆகமெல்லாம்வெளுப்பேறி யிரத்தம்வற்றி
 அடிவயிற்றிற்கனத்துமெள்ளக் கூம்பின்மீதே
மோகமுடன்தாதுகெட் டுளமாந்தைபோல
 மூட்டிவருங்கும்பத்திலே வேவுகொண்டு
தாகமுறும்பசிதணிந்து கைகாலோயுஞ்
 சண்டாளகுணங்கள்செய்யுஞ் சோகைதானே. (௰௩)

சோகைக்குணம்.

ஆதாரமாறுக்கும் நடுவேநின்ற
 ஆலம்புதசநாடியங்கே யசைவைபற்றிக்
கேதாரமூலத்தே நோக்கும்போது
 இரிச்சனமாம்வாயுவங்கே கீழ்நோக்கும்
சூதகத்திலேவேவுகண்டு சுழுனையூடே
 சுக்கிலத்தின்மேலங்கனீர் து ஊனுமின்றந்து

யாதாரமூலத்தி லடுக்கும்பின்னே
பலவிதமாய்சீழும்ரத்தஞ் சலமும்வீழும். (௱௪)

குருநாடி.

அந்தரமாயிடைநாடி சிரத்திலேற
அப்பசுத்தூடுசென்று பரத்தைமேவி
சுந்தரமாய்வாய்வங்கே சிரத்தினூடு
சுறுக்கெனவேயிடையினொடு நாற்றங்கொண்டு
தந்திரமாய்த்தொந்தத்தில் பதியும்நோய்கள்
சலமுடனேசீயும்ரத்தந் தொந்தமாக
குந்திரமாயுடல்குத்து நோய்கள்செய்யுங்
குறிப்பறிவீர்சிரச்சூலை குணமென்றோதே. (௱௫)
சீர்பெருகுநாயகனே வாயுபுத்திரா
திறமானவத்தியென்ற நாடியோடே
பாரறியக்கடினமுறும் வன்னியோடும்
பண்புடையசிரசங்கே பதிந்துபோகும்
வார்பெரியவாயுவங்கே கபாலந்தன்னில்
வகையானவிசைநரம்பை வளைத்துப்பற்றிக்
கார்பெருகிலரும்போலே யூனுருவிக்
காற்றதனில்வந்தடைக்குங் கருதிப்பாரே. (௱௬)
நாடியென்றால்தசநாடி பத்துண்டாகும்
நலமுடனேயோர்விரலி லிரண்டுநாடி
கூடியங்கேயைவிரலுங் குவித்துநிற்குங்
குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
அதனுடையகூட்சநிலை வாதவீட்டில்
தாடிநிற்குமாவிரல்மூன் றுருவாய்ப்பாய்ந்து
சாதகமாய்நின்றநிலை தன்னைப்பாரே. (௱௭)

நாடிநிலையறிய.

பாரென்றாலைந்துக்கும் நடுவதாகப்
பற்றிலன்றிவரலாறு தன்னைப்பார்க்கில்
சீரொன்றேபித்தத்தின் முன்னேநிற்கும்
தெசநாடிபத்துக்குந் தானாய்நிற்கும்
மேரென்றால்வாதமென்று சொல்வார்மூடர்
மேவியங்கேபார்ப்பளவில் வேறாய்நிற்கும்
தார்கொண்டகுருநாடி தன்னையுராய்ந்தால்
தன்வந்திரியனென்று சாற்றலாமே. (௱௮)
பேர்பெரியகுருநாடி குணமேதன்னில்
புரண்டுவரும்வாதத்தி லட்டைபோலே
சீறியமிருமிரு பத்தொன்றும்
தின புசெறிமிகுதியுண்டாந் தேகம்வாடும்.

சீர்தெரியபித்தத்தி லாமைபோலே
தோன்றிடுமேல்சுரமிருக்குஞ் சுற்றும்வாழ்நீ
கார்பெருகிவருவதுபோல் வேர்வைதோன்றுங்
கதித்திடுமேல்நீர்கடுக்குங் கைகாலோயும். (௱௯)
சிலேற்பனத்திற்குருநாடி சிங்கம்போலச்
சீறிநிற்குமாமாகில் சன்னிதோன்றும்
ஆர்ப்பனத்தையூடுருவித் தோன்றுமாகில்
அசாத்தியமாமானகுறி தப்பாதப்பா
கார்ப்பெனவேகுன்றுன்போல் குன்றிப்போகில்
கழியும்வயிர்கடுப்பெடுக்குங் கைகாலோயும்
தேர்ப்பதுவுமில்லையில்லை திட்டஞ்சொன்னேந்
தேர்ந்தகுருநாடிநிலை தோய்ந்துபாரே. (௱௰)
ஏற்றமுள்ளகுருநாடி தன்னைப்பார்க்கில்
இடைகலையும்பின்கலையு-மிசைந்துமாறி
மாற்றமில்லாச்சுழுமுனை தான் தன்னைப்பற்றி
மாறிநிற்குங்கத்தரிகை மாறல்போலே
சீற்றமுடன்வாதபித்த சிலேற்பனமொன்றே
தெசனாடிபத்துக்குந் தாயாய்நின்று
கோத்தசிறுகுருநாடி நிலையைப்பார்க்கில்
கோமான்றன்றிருக்கூத்தைக் கூறலாமே. (௱௧௧)

குருநாடி-உபதேசம்.

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானும்
அஞ்செழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுதனினைவிலொளி வதுவேயாகும்
விதமுடனேயாதார மாறுமாகும்
உகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறு
மூர்ந்துநிறகுங்குருநாடி யொன்றுபோமே
சிகாரமெனுமட்சரத்தை நாடிவாசி
சிவமென்றநிலையறிந்து தெளிந்துபாரே (௧௧௨)

குருபதேசம்

பார்க்கையிலேஐயுங்கிலியும் வசியமென்று
பற்றிநின்றமூலத்தி லூன்றிநின்ற
ஏற்கையுடனெட்டெழுத்தை ஓம்ஆங்உங்ராங்பநமசிவாவென்
றிடைபின்கலையின் சுழுனையூடே
தாக்கையிலேசூரியன்போல் வட்டங்காணுந்
தாட்டுணையாய்நடனமிடுந் தவத்தைக்கண்டு
ஆக்கமுடன்விழ்தங்க ளீவாயானால்
ஆகராசிவசிவா அறிந்துநோக்கே. (௧௧௩)
அஞ்செழுத்தைமாறியங்கே மாறிமாறி
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அருளைப்போற்றி

அஞ்செழுத்தைச்சடத்திலங்கே நிருத்திக்கொண்டு
அருள்பெறவேயாயிரத்தெண் ணுருத்தானோதி
அஞ்செழுத்தையுருவேற்றச் சித்தியாச்சு
அவுஷதமுஞ்சித்தியா மறிந்துநோக்க
அஞ்செழுத்தாற்கற்பமுண்ண யாக்கையழியாது
அரகராவிப்புதுமை யருமைதானே. (கக௪)

இந்தமுறைசெய்வதற்கு மருந்துசித்தி
இயல்பாகசடத்துக்குச் சுத்தியாச்சு
முந்தவேமந்திரத்தை வெளிவிடாதே
முன்னுரைத்த நூலைப்போல் கொடுக்கவேண்டாம்
அந்தாத்திலெழுநரகில் வீழாதேநீ
ஆருக்குமுந் நூலை யீயவேண்டாம்
வந்தவந்தசீஷருக்குக் கொடுக்கவேண்டாம்
வார்த்தையினாற்பகர்வார்தான் மெத்தவுண்டு
தொந்தமுடனுன்வயிற்றிற் பிறந்தபிள்ளை
தொடுகுறியுஞ்சொல்லியுடன் கொடுக்கநன்றே. (ககரு)

ஒன்றானசீஷனுக்கு நூல்தானீய
ஒருதரம்போல் நூறுதர மனத்தைச்சோதி
நன்றாகமனதிருந்தால் தனத்தைக்கேளு
நழுகியவர்போவரென்றால் நூலீயாதே
குன்றாகச்சொன்னதைத் தருவானாகில்
கொடுத்திடுநீ நூல்வாங்கு நலத்தொன்று
மன்றானசீஷனுக்கு மந்திரமீயாதே
மனந்தெளிந்துகசடற்றால் மந்திரமீயே. (கக௬)

அடுக்குமுதல்பொன்றருவே னென்பார்கள்ளர்
அவனுடையகள்ளமெல்லாம் அறிந்துக்கொண்டு
முடுக்கமுடன்வித்தையெல்லாங் கற்றுக்கொண்டு
முகம்பாரான்பொருளீயான் முன்னேநில்லான்
கடுக்கெனவேவார்த்தைசொல்வான் வயித்தியங்கைவந்தால்
காலன்வலைக்குள்ளாவார் கசட்டுமாண்பர்
துடுக்குடனேயவனிடத்தில் சொல்லவேண்டாந்
துரோகியவன்படித்தவித்தை தூளாய்ப்போமே. (ககஎ)

சீஷனென்றால்வகைகேளு தேன்போல்நெஞ்சந்
தெண்டனிட்டுப்பணிந்துமே கையுங்கூப்பிப்
பாசமுடன்குருவெனக்குத் தெய்வமென்று
பணிவிடைகளனுதினமும் பண்பாய்ச்செய்து
நேசமுடன்கனவிலுமே நினைவவைத்து
நிலைமையுடன்தான்சொன்ன குருவுக்கேற்றோன்
வாசமுடன்குருகற்ற வித்தையெல்லாம்
வளர்ந்துமிகுங்கேட்டலைபோலே செல்வமாமே. (கக௮)

செல்வமுடன்வித்தையுண்டாஞ் சிறப்புண்டாகுஞ்
செகத்திலேகண்டவர்க்குச் செல்வனாவான்
சொல்வதென்றால்வானவர்க்குஞ் செல்லுந்தூது
தொல்லுலகிலவனெனவுஞ் சுருதியாகும்
கல்வியென்றகல்வியெல்லாங் கருத்திற்றோன்றுங்
கனிவினில்வைத்தியமுங் கைக்குள்ளாகும்
நல்லவனென்றுலகமெல்லாஞ் சொல்வார்சொல்வார்
நற்குருவின்மனந்தெளிந்தால் நன்மைதானே. (௧௧௯)

திருட்டினால்வந்தொரு சீஷன்றானுஞ்
செகத்திலேபொய்யுரைத்து மெய்பேசாமல்
மருட்டினால்குருதேடி வருவான்மட்டி
வார்த்தையினால்வாய்ஞானம் பேசிக்கொண்டு
உருட்டதனால்குருமனத்தை மருட்டிக்கொண்டு
ஓகோகோவித்தையெல்லாங் கைக்குள்ளாக்கி
குருட்டானமாபாவி குருவுக்கென்று
கொடுக்காமல்மனதெரியக் கொட்டினானே. (௧௨௦)

வித்தைதனைதிருட்டாலே வேண்டிக்கொண்டு
விதமறியுங்குருவாசான் மனதுநோக
சத்தியந்தான்மறந்துவிட்ட சண்டாளன்றான்
தாரணியில்மானிடர்க்கு மருந்தையீந்தால்
சித்திதான்வாராது பிணிதான்மிஞ்சிச்
செகத்திலுள்ளபேர்களெல்லாம் நகைப்பார்தானும்
முத்தியும்வாராது மகாநோய்கொண்டு
முறையானவவன்குடும்ப முழுதும்போமே. (௧௨௧)

நாடியிடசூக்ஷநிலே பகுந்துசொல்வே.
நன்மணிக்கடைநாலு விரலைத்தொட்டு
கூடியதோர்மணிக்கட்டில் விரல்தான்போட்டு
கூறுடனேமூவிரலுங் குவித்துப்பாற்கில்
தேடியதோராணுக்கு வலக்கரமேயாகுந்
திறமுடையமங்கையர்க்கு இடக்கரமேயாகும்
கூடியதோர்வாதபித்த சிலேற்பனத்துள்ளே
கொட்டிநிற்குங்குருநாடி துறந்துபாரே. (௧௨௨)

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
யூடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுதான்மதுவருந்து நேர்மைபோல
வாதபித்தசிலேற்பனத்தில் மதுவுண்டாற்போல்
என்றைக்கும்வாதபித்த நடுவேநிற்கு
மேறுவதுங்குறைவதுவு மில்லைசொன்னோம்

கன்றுக்குப்பால்சுரக்கும் பசுவைப்போலே
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. (௧உ௩)

குருநாடிநிலையறியாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டுச்சாத்திரம்பேய்க் குசல்கள்செல்வார்
குருநாடிவாதபித்த சிலேற்பனமூன்று
மத்திமமேதானறியார் வார்த்தைசொல்வார்
கருநாடிகுருநாடி யாகக்காணுங்
கைம்முறையாய்க்கருத்தொருமை காட்டக்காணும்
பெருநாடிசாத்திரத்தி லேமயங்கிப்போவார்
பித்தரேகுருநாடி பின்னல்பாரே. (௧உ௪)

வாதபித்தமிரண்டுக்கும் நடுவேபார்க்கில்
மதுவுண்ணும்வண்டதுபோல் மத்தியத்தில்
போதமுற்றமூவிரலு முருவிப்பாய்ந்து
பூரணமாய்மூலமுத லுருவித்தாண்டிச்
சாதமுற்றவிஷநரம்பி னூடுசென்று
சந்திரமண்டலமேவிச் சார்ந்துபின்னும்
நாதமுறைகுருநாடி யெங்குஞ்சுற்றி
நடுவில்வருமநேரதனை நாடிப்பாரே. (௧உ௫)

நூலொன்றுந்தப்பாதுகை காட்டிக்கொண்டால்
நூதனமாய்ப்படித்தவர்கள் நுழையமாட்டார்
வாலென்றுந்தலையென்று மறியாமூடர்
வார்த்தையினல்மருட்டிவைப்பார் மற்றபேரை
சேலொன்றுமறியாத புத்தகப்பேய்
சிங்கத்தைநரியெதிர்த்த செய்கைபோல
மாலகன்றகுருநாடி தானும்சொல்லும்
மற்றொருவரெதிரினில் வழுத்துங்காலே. (௧உ௬)

குருமுறையாய்க்குருநாடி தொட்டுக்காட்டிக்
கூறுகக்குருநாடி குலுங்கச்சொல்லித்
திருமுறையாய்மூவிரலுஞ் செய்கைசெப்பிச்
சித்தாந்தவேதாந்தஞ் சடத்திற்காட்டி
மருள்நாடியிருள்நாடி யிரண்டுந்தாண்டி
மாற்றமில்லாக்குருநாடி மதியுங்காட்டி
ஒருநாடிமூவிரலு முருவிநின்ற
உண்மையறிந்தவர்க்குநீ யுரைக்கொணாதே. (௧உ௭)

பராபரமாய்குருநாடி பண்ணிப்பார்க்கில்
பங்கமிடக்கீழ்மேலும் பாய்ந்தநேர்மை
தாரதாமாய்விரல்மூன்றுந் தன்னைப்பார்க்கில்
சாதகமாயோர்விரலுக் கைந்துகாணும்

நிராமயமாய்விரல்மூனையு மிடமும்வாதம்
நின்றநடுபித்தமென நிறைந்துகாணும்
வராயகமேலேற்பவது வலமும்பின்னும்
வகைபார்க்கில்மூவிரலுஞ் சீரைப்பாரே. (௧௨௮)

வேறு.

மன்னியமுன்கைகீழே மணிக்கடையதினுமப்பால்
பின்னியேபிரிமுறுக்காய்ப் பெலத்துமுக்கணமும்தோன்றிற்
சென்னியும்பிடரிற்சுற்றித் திசைதொறுங்கயிர்போல்வீசும்
உன்னியேயெழுபத்திரா யிரமுருமுற்றதாமே, (௧௨௯)

உற்றதோர்வாதந்தன்னி லுறுதியாய்க்கீழுமேலும்
நத்தியநாடிதானு நயம்பெறுமன்னங்கோழி
பற்றிடுமயிலும்போலப் படருநன்னாடியோடுஞ்
சித்துருமாமையட்டை தெண்டுடனேத்திபோலாம். (௧௩௰)

சிலேற்பனநாடிதானுந் திரளுடன்சில்லூர்ப்பாம்பு
தாற்பெனத்தவளையூணி தயவுடன்சாடுமாபபோல்
காற்பெறுமிவைகள்மூன்று நாடியின்குறிப்புகண்டு
ஆர்ப்பனந்தெளிந்துநீயு மறிவுடனமர்ந்துநோக்கே. (௧௩௧)

திருநாடிநேர்மைசொல்லச் சிவனயன்மாலுமாகுங்
குருநாடியானவாறுங் கூர்ந்திடுகருவிற்றோன்றி
வருநாடியைந்துந்தானே வகுத்திடும்பூதமஞ்சு
உருநாடிபத்துந்தானே யுறுபிணியேறிநிற்கும். (௧௩௨)

எழுந்திடுஞ்சத்ததாது இயல்புடன்சொல்லக்கேளீர்
வழுந்திடுந்தோலெலும்பு தசையொடுநரம்புபச்சை
அழுந்திடும்யாக்கைமூற்றி யானதோர்தாதுநேர்மை
குழிந்திடுமயிர்நெய்யோடு சுக்கிலஞ்சிறுநீராமே. (௧௩௩)

இப்படித்திசையினாடி யெழும்பியேயிடையினோடு
சொற்படிகலையுமாறிச் சுழினையுஞ்சுற்றிமாறி
முற்பனவீணையோடே மண்டலமூட்டியேங்கி
அப்படியத்திசிங்கி யலம்புடைபுருடனமே. (௧௩௪)

ஆக்கியநாடிதானு மறுநான்குமொன்றுமாகில்
தாக்கியகருவிலாகித் தத்துவந்தன்னைச்சார்ந்து
ஏக்கியவெழுபத்தீராயிரம் நரம்பைச்சார்ந்து
கூக்கியபம்பரம்போல் குறுகிடுமசைவைப்பாரே, (௧௩௫)

பம்பரமீதிலந்தக் கயிறுதான்சுற்றிவீசித்
தும்பரமாகத்தானே இறுகிறுய்சுற்றிநிற்கில்
அம்பரமானவாத மதுவென்வறிந்துகொள்ளு
நம்பரப்பித்தந்தானு நடுநேராய்ச்சுற்றியோடும். (௧௩௬)

உன்னியேயெறிந்தபோது ஒருசுற்றுருண்டுசுற்று
மன்னியேசுற்றிவீழ்ந்தால் சிலேற்பனங்குருதியாகும்
நன்னியமரணம்பார்க்கில் நழுகிடுமுடனேவீழும
மன்னியவயிறுபார்க்கி லப்படிவிசையைப்பாரே. (கஙஎ)

வயதுதானூறேயானல் மங்கையைமருவுநேரம்
சுகமதாய்சுக்கிலந்தான் சுறுக்குடன்முறுக்கியேறும்
கயிறெனத்தொய்யவீழிற் கண்டிடும்பித்தஞ்சாகும்
வயதிதுவிருபத்தஞ்சி வகுத்தறக்குறித்துப்பாரே. (கஙஅ)

ஒன்றுக்குமுக்காலாகி லுரமதுகுறைந்துசாடும்
மன்றுக்குள்தனிலத்தாளில் வயதுமிப்படியேயாகும்
துன்றுக்குள்பாதிக்குள்ளே தொய்யவேயருகிவீழில்
புன்றுக்குமாரத்தோன்றும் வயதெனக்குறித்துப்பாரே. (கஙகூ)

இப்படிபம்பரந்தா னேற்றமுந்தாழ்ச்சிகண்டு
அப்படிநாடிதானு மமர்ந்திடுஞ்செய்கையாகும்
முற்படிமுன்னும்பாய்ந்து முழுதுமேகுறித்துப்பார்த்து
சொற்படிசெய்வாயானல் நாடியின்றெருகுப்புத்தோன்றும். (கசO)

மேவறு.

குருநாடிதிருநாடி குறிதான்மேலும்
 கொண்டபஞ்சநாடியென்றுஞ் சத்ததாது
திருநாடியானதுவே திறமாய்த்தேர்ந்து
 சித்தாந்தகுருநாடிச் சீரைப்பார்த்தால்
வருநாடிபஞ்சபூத நாடியென்றும்
 வகுக்கலாந்தசநாடி வகுப்புமெத்த
கருநாடிகுருநாடி யாகக்காணும்
 கண்டவர்க்குமெஞ்ஞானங் கருதலாமே. (கசக)

பம்பரம்போற்குருநாடி கிறுகிறென்று
 பற்றிநிற்கும்வாதபித்த ந்டுவிற்றானே
அம்பரம்போற்குமிழியெனும் வாதபித்த
 மையமெனுநாடிமுத லியாவுமோடிக்
கம்பமுதல்மண்டலங்கள் மூன்றுஞ்சுற்றிக்
 கத்தரிகைமாறலெனக் கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்தங் கருவிற்பாய்ந்து
 தமரகம்போலோடிநிற்குந் தன்மைதானே. (கசஉ)

தொண்டையிலேசேறிறக்குங் குரலைநோக்கிச்
 சூட்சமுடன்கையைவைத்துச் சுகமாய்ப்பார்க்கில்
கொண்டெழும்வாதமெனும் நாடிதானே
 கோழிகுரல்போல்பார்த்தாலு மதுபோல்வாதம்
மண்டைபிடிக்காரர்தலை கையைவைத்து
 வகையுடனேதரிப்பதுபோ லதிரும்பித்தம்

ஒண்டையிலே தவளை தனைப் பாம்புசென்று
உறுதியுடன் தின்றாற்போ லொக்குஞ்சிலேற்பம். (கசங)
மூன்னுரைத்த நூல்களெல்லா மனைத்துஞ் சொன்னோம்
முதுமொழிதான் கற்றவர்க ளறியலாகும்
நன்னூலாங்குருநாடி தேர்ந்தபேர்க்கு
நடுவெளிபோற்றோர்ந்துசொன்னோம் நாடியெல்லாம்
கன்னல்மொழிமாதுனக்கு எடுத்துசொன்னேன்
கருதியேபார்ப்பளவில் கடினமெத்த
பின்னல்மய்வெகுகோடி பிரித்துச்சொன்னோம்
பாருடனீராராய்ந்து போற்றிக்கொள்ளே. (கசச)
குருநாடிவாதத்தில் நிற்கும்போது
கொம்பசைந்தவாறிருக்குங் கூர்ந்துபாரு
குருநாடிபித்தத்தில் நிற்கும்போது
குயில்போலேவெதும்புமது குறிப்பைப்பாரு
குருநாடிசிலேற்பனத்தில் நிற்கும்போது
குளிர்ந்தசலம்போலிருக்குங் கூர்மைபாரு
குருநாடிமூன்றுக்குஞ் சரிபோல்நிற்கில்
கோகோவெனக்குமுறுங் குணத்தைப்பாரே. (கசரு)

மரணக்குறிப்பு.

மரணமது அறிவதற்குக் குறிப்பைச்சொன்னோம்
வழுவாகவிசைநரம்பு குலைந்துதானே
விரணமென்னும்பொறிகளெல்லாந் தளர்ந்துமெத்த
விசைநரம்புதான்குலைந்து விரைந்துவாங்கி
நாணமெனப்பற்கடித்து மணியுநட்டு
நாவுலர்ந்துமூச்சடர்ந்து நடுங்கிக்காணும்
தூரணமெனவாதபித்த சிலேற்பனமெல்லாந்
துடித்துவரும்விட்டிலைப்போற் றுடிக்குந்தானே. (கசசு)
சன்னியெழும்போதிலந்த நாடிமூன்றுஞ்
சாதகமாஞ்சூழல்வண்டு தண்ணீர்மீதே
உன்னியதுசுற்றிவரும் போலேயோடி
உள்ளிறங்கிப்படபடென முட்டியேறும்
மன்னியசிலேற்பனத்தில் நாடிதானும்
வழுவாமலெதிரேறி வாதவீட்டில
பின்னியதுவாதத்தை யழுத்தித்தாழ்ந்து
பேதிக்கில்மரணமென்று பிரித்துச்சொல்லே. (கசஎ)

வேறு.

சூத்திரநடுவேதோன்றி விலங்கியேயகனுஞ்சீவன்
மாத்திரைமணியீயப்போ லதுமேதான்றிநிற்குஞ்சீவன்
வேற்றுருக்கண்களரண்டு மணியதுகட்டிநின்றால்
யாற்றிரைமூன்றினுள்ளே யகன்றுமேபோமெல்லினல்லாய். (கசஅ)

நெற்றியில்நரம்புரண்டும் நீலமாய்க்கவர்போல்தோன்றில்
அற்றிடுந்தேகம்விட்டே ஆறுமாத்திரையிற்சாவு
சுற்றியவளையம்போன்று சூழ்வாநுதலில்நீளம்
பற்றியேகாணுமாகிற் பகரஞ்சுதிங்களேழே. (கசக)

பத்தியாய்க்கண்டம்நொந்து பதைத்துமேதுடிப்புமுண்டாம்
வற்றியேவெளுத்துக்காயும் வரையதுசுருங்கலாகி
இற்றியபுருவந்தாழ்ந்து புருவத்தின்மையம்நீளிற்
சத்தியமாதம்நாவில் தருணத்தில்மரணமாமே. (கருய)

பெறுக்கவேமுகங்கறுக்கிப் புலால்போலாய்மூத்திரத்தில்
திருக்கைபோல்மடநல்லாளே திங்கள்மூன்றதனிற்சாவு
வருக்கவேமுகம்பெறுத்து வகையுடன்வெளுக்குமாகில்
மறுக்கவேதிங்கள்தன்னில் மரணமுங்காணுங்காணே. (கருக)

முகத்தடிபெறுத்துக்கண்டு முகமெல்லாம்வெளுப்புமாகி
நிகத்தமாய்ப்புருவங்காணில் நெறியானமாதமிரண்டாய்
அகத்தினிலுணர்வுமுற்று மடிக்கடிசுவாசமூட்டில்
செகத்தினிலறியச்சொன்னோம் சீவனுமகலுந்தானே. (கருஉ)

நாசியின்சுழியிரண்டில் நடுச்சுழியோங்குமாகில்
பேசியசீவன்விட்டுப் பிரியநாள்முப்பத்தொன்றே
மாசதுவிழிகள்மூக்கு வற்றியேகருத்துக்காணில்
ஊசலிலெதிர்த்தாற்போல உடம்பைவிட்டுயிரும்போமே. (கருங)

வார்த்தைநான்சொல்லும்போது மார்புக்குளடைத்தாற்போல
ஊர்த்தமாயெழும்பாதாகி லுயிர்விடுமாதமூன்றில்
சேர்த்துறைசெய்யிலற்ற திடமன்னர்தங்கள்போலச்
சார்த்தினேன்மாதம்ரண்டிற் சடத்துயாகலுந்தானே. (கருச)

சொல்லிலோநாத்தடித்துச் சொற்றடுமாறுமாகில்
மெல்லநாவரட்சிகாணில் வீழ்வதுமாதமூன்றில்
மல்லெனவரைக்கவுந்தான் மந்தமாய்மக்கமாகில்
அல்லிலுங்குழலாமென்றே யடைந்திடும்மரணந்தானே. (கருரு)

மேனியுமிகபெருத்து விம்மியேகழிந்துபின்னும்
யூனிலாச்சோகமாகில் ஒருவருஷத்திற்சாவான்
பானநீருட்லிற்றுவிப் பாவையிலுடல்போற்காணில்
ஆனியாமாதம்பத்து வறுமாதமென்றுகூறே. (கருசு)

மெய்யெலாம்பசுமையாகி யிறைந்திடும்முமாகிக்
கையடிசுருங்கிக்காணிற் கருதுவெண்மாதஞ்சாவான்
நெய்மயம்வேர்வைகண்டு நெஞ்சுயர்ந்திருபால்வற்றித்
துய்யதோர்ரூபமாறில் துயர்வருமாதமாறே. (கருள)

இருவிரல்மேலெலும்பு மிரண்டுமேயுன்னிக்காணில்
உரைசெய்யுமாதமூன்றி லுயிரதும்மரணமாகும்

மருவிய கண்டம்நீண்டு வற்றியேமிடருந்தாழ்ந்து
திரையெனத்தோற்சுருங்கில் செப்புவர்மாதம்ரண்டே. (கடுஅ)

பொருத்தெல்லாம்நெகிழ்ந்துகாணில் போர்கழன்றிருக்குமாகில்
துருத்தப்போலெய்ப்புகாணில் துஞ்சுவர்மாதமொன்றில்
குருத்திரள்நடத்தல்தன்னில் எழும்பவத்தியக்கங்காணில்
வருத்தமாய்த்துயரங்காணில் மரணம்பத்திருநாளொன்றே. (கடுகூ)

காயத்திலடிசுருண்டு கருத்துத்தோற்சுருங்கிக்காணில்
பேயொத்தநிறமுமானால் பிரியுநாள்பத்திற்சீவன்
நோயற்றோரெனினுமேனி நுடங்கியேமார்புதாழ்ந்து
ஒய்வுற்றுப்பதறிக்காணி லொடுங்குமேயுயிர்நாளஞ்சில். (கசு0)

கண்டத்தில்நரம்பிரண்டுங் கதிக்கவேவிரைக்குமாகில்
பிண்டத்தில்சீவன்விட்டுப் பிரியுநாளாறுமென்க
தண்டொத்துக்காரையேழுந் தடித்ததுவுயர்ந்துகாட்டில்
பண்டொத்ததருணத்தாலும் பகரிருநாளில்வீழ்வார். (கசுக)

உடம்பெல்லாம்பதறிக்காணி லுன்னடியுன்னித்தாளில்
நடந்திடில்கால்பின்சாயில் நாளொன்றிற்சாவாந்திண்ணம்,
திடம்படவிருக்கினுந்தான் தேகமேகுறுகிக்காணில்
விடம்பயில்கண்ணினுளே வீழும்நாளஞ்சுதானே. (கசுஉ)

மலத்துடனெய்தான்போல வரிநீலம்போலேவீழ்ந்தால்
உலத்தியசடத்தைவிட்டு உயிர்நீங்குமாதமாறில்
கொலக்கொடியணங்கிநல்லாய் குமுக்கெனச்சோரைவீழில்
சலத்தகுமாதமஞ்சில் சாவதுவுண்மையாமே. (கசுங)

அரைத்தசோறதுபோல்வீழி லவிழ்தமுஞ்செய்யிற்றீரா
திரைத்திடுந்திங்களாலி லேகிடுமரணமென்க
கரைத்திடுங்கூழ்போல்வீழ்ந்து கலங்கியேபொருமுமாகில்
உரைப்பதுமாதமூன்றி லொடுங்கிடுமுயிருந்தானே. (கசுச)

வெள்ளைதானிரைந்துவீழ்ந்து விலாவுள்ளேசொருகிக்குத்திச்
சுள்ளெனநெஞ்சிற்றாவில் துருவறமாதம்ரண்டில்
கள்ளெனத்துறையிற்கம்பங் கஞ்சிபோற்கழியுமாகில்
எள்ளிடுமாதமந்தத் தியல்பென்றுசொல்லுவாரே. (கசுரு)

நினைக்குமுன்சுழியுமாகில் நீர்நிறங்கரியைப்போலத்
தினைப்படிசுழியுமாகில் செய்யுநாளிருபதென்க
பனிச்சலமன்னன்வீழ்ந்து பன்றிநெய்படர்ந்ததொத்தால்
மனத்தினிலெண்ணவேண்டா மரணநாள்பதினாறென்றே. (கசுசு)

குக்குடத்தேசப்போன்று குருந்தினையரிசிபோலும்
ஒக்கவேயிரத்தஞ்சீழு மோடிடில்நாள்பத்தாகும்
தொக்குளேசொருகிக்கொண்டு துருத்திரன்னம்வீழ்ந்து
மிக்கதோர்மயக்கமாகில் வீழும்நாளேழாமென்னே. (கசுஎ)

எடுத்திடுங்கழிச்சலற்று இறுக்கிப்பின் கழிந்துள்ளாகி
நடுக்கியேமயங்கிக்காணில் நவிலுவார்நாளஞ்சேதான்
உடைத்தகூழ்முட்டையேபோல் ஊன்வெடிநாற்றம்நாறில்
அடிக்கடிகழியில்தானே யறுதிநாள்மூன்றதாமே. (௧௬௮)

பச்சிலையரைத்தாற்போலப் பலபலநிறமதைப்போல்
கெச்சிடிநாற்றமாகக் கழிந்திடில்நிசமாய்ரண்டே
வெச்செனத்தும்பிக்கொண்டு மிகமலஞ்சுவாயம்போல
மிச்சமாவிகற்பமாகில் வீழும்நாளன்றுதானே. (௧௬௯)

மண்டையில்சலம்போல்நாறில் மதுவெனநீர்தான்வீழில்
தண்டுளேயடைந்துவீழில் சாவ்சொல்மாதம்ரண்டில்
கெண்டியில்நீர்போல்வீழ்ந்து கீழ்நுரையற்றதாலே
கண்டுகொள்மாதமேழிற் கழன்றிடுமரணமெய்யே. (௧௭௰)

குறிப்படி ஆய்ந்துநீரில் குளிர்ந்துதானறியாதாகில்
அறிவொடுகழியுமாகி லகலுநாளாறுமென்க
வெறிகமழ்மலர்ப்பூங்கோதாய் விளங்குமப்பலகுணத்தால்
செறியுயிர்மாளுமென்னச் செப்புவார்புவியுள்ளோரே. (௧௭௧)

இரும்பினில்மலர்ந்துகாய்ந்து எழில்முகங்கவிழ்ந்துக்கொண்டு
ஒருபுறஞ்சாய்ந்துகால்க ளுண்டியேமடக்கிக்கொண்டு
விருப்பொடுகருகிமூக்கு விரைந்துகைவைத்துக்கொண்டு
திருப்பியேதிரும்பிக்கொண்டு மருந்திடிற்சேர்வார்நோயில். (௧௭௨)

சார்ந்துகால்முடக்கிக்கொண்டு சந்தடியூடிகையைச்
சேர்ந்திடவைத்துக்கொண்டு சிக்கெனக்கால்கள்கட்டிப்
பாய்ந்திடுந்தவளைப்போலப் பரிவுடனிருப்பானாகில்
காய்ந்திடுவார்கள்நோயி லென்றுதான்முன்னூல்சொல்லே. (௧௭௩)

நடக்கினிற்சொரூபமன்றில் நடையதுதாழ்ந்ததாக
அடக்கமாய்நடப்பானாகி லகவினிற்றவர்வானாகில்
சடத்தெருபுறமேசாய்ந்து சத்தெனநடப்பானாகில்
திடப்படத்தெளிந்துகொண்டு நடக்கிலுஞ்சேர்வார்கோயில். ()

மலர்ந்துதான்கைகள்ரண்டு மார்பில்வைத்துறங்கலாலும்
நிலுந்தனிற்கவிழ்ந்துகைகள் நெற்றிவைத்துறங்கலாலும்
பல்நீரவிழித்தாற்போலக் கிடந்துறங்குதிதலாலும்
மிளங்கிளையனைத்தாய்நோயில் விழுந்திடுவார்கள்திண்ணம். (௧௭௫)

வாயினாலூதலாலும் வருந்திப்பற்கடிக்கையாலும்
தீயுதோர்நெடுமூச்சிட்டுச் சேர்த்ததோபாடிவன்னி
ஊயிலாதுறங்கையாலு முருவக்காலைமாலை
நேயமாய்த்துயில்வதாலு நிச்சயம்நோயிற்சாவார். (௧௭௬)

மாலையில்நிசிகாலத்தில் வளர்விசைக்கடிகைதன்னில்
காலவேபசியாம்போது சககமாம்வேளைதப்பிப்

பாலெனுமமிர்தமன்னம் பண்புடனருந்துவோர்கள்
தூலமாய்நோய்க்குள்ளாகிச் சுழன்றுழன்றலைவர்மாதோ. (௧௭௭)

சுடலையிற்கழுப்பக்கத்திற் சூழ்ந்தபேய்க்கூட்டந்தன்னில்
இடமுறகலவிசோரா ஷத்திரிசாசஞ்சொலலாம்
அடிமையாய்த்தெய்வமுற்றோர் மகத்துவமுள்ளோர்வார்த்தை
விடமெனத்தூஷித்தாலும் வீழுவர்நோயில்மின்னே. (௧௭அ)

மருண்டவர்போலப்பேசுஞ் சினத்தை.

மனதினிற்சூதையற்று வரும்பொறிகலக்கமாகி
நினைத்திடும்வெருட்சிகொள்ளில் நிறத்தசைவாயுவான
மனத்தைவைகுணங்கள்காட்டி லெழும்பலநோய்களென்ன
வுளைத்தையுங்கருத்துஞ்சொல்லும் மகாமுனிகும்பன்சொல்வான். ()

உரப்பவமும்மலத்தி னுற்றதோர்மலத்தைப்பற்றி
நிரப்பவலத்திலாய்ந்து நிலைப்பிலாமாதராவார்
அரப்பவமும்மலத்தை யடுத்துமேவசமாய்நிற்பார்
முரப்பவமலத்தின்மேவார் முன்னில்லார்கோயிலன்றே. (௧அ௰)

ஆணவமதனினாலு மறிவிலாமாய்கையாலும்
பூணுங்காமியத்தினாலும் பொதுப்பெருநோயில்வீழ்வார்
ஆணவம்பித்தமாசை யதுவாதமென்பார்மேலோர்
காமியஞ்சிலேற்பனமென்றுங் கருத்துடன்புகன்றதாமே. (௧அ௧)

சினத்தெழுங்கோபத்தாலுஞ் சிற்றின்பமிகுதியாலும்
கனத்திடுஞ்சுமைசுமந்து கருத்துவேறுகையாலும்
மனத்தெழுதுயரத்தாலும் வறுமைக்குள்ளாகையாலும்
தன்வினைநோய்க்குள்ளாகி வேதனைபடுவார்நாளும். (௧அ௨)

அப்பங்கன்மானநாளி லைப்பசியானபோது
வெப்புறவெளியிற்சென்றே விரைந்துதானடந்தநாளில்
இசப்பியல்வாயார்போகம் கொள்ளவேநடந்தநாளில்
துப்பிதம்மடவாரோடே தோய்ந்தவர்நோயிற்றோய்வார். (௧அ௩)

உண்டநீர்கொள்கையாலு முண்டபின்கொள்வதாலும்
தின்றவூன்குறைதலாலுஞ் சிறப்பிடுமெய்யினாலும்
நன்றியகல்விபோகம் நாளுமேகழித்தலாலும்
என்றுமேநோய்க்குள்ளாகி யிறந்திடுவார்கள்மாந்தர். (௧அ௪)

வியாதிக்கூறறியகாடி.

இப்படிவருநோயான வெண்ணிலாக்கடலுட்சென்று
குப்புறவிழுமுன்னோடிக் கொள்பவர்மனிதரோகஞ்
செப்புவர்முனிகாமுன்னாள் செந்தமிழ்மாறிச்சூழ்ந்து
வப்பிணிலுணர்ந்தோர்சேர்வார் நமனென்னுமவிண்ணில்மாதே. ()

வேறு.

நீர்மேகமானவர்க்கு நாடிதானும்
நிர்ணயமாய்நாடியெல்லாம் பொன்மைகெட்டு
கார்பேகம்போலவந்த பொறியின்மீதே
கழன்றவிழும்பொறிபோனு லோட்டிதானுஞ்
சீர்மேகஞ்செறிந்ததென்றால் கருதுநூல்போல்
சீறிநிற்குங்குருநாடி சேர்ந்துதானும்
போமேகங்கடுத்திடுகில் வாதபித்தம்
பின்னியதுதுடித்துவரும் பிரிவுதானே. (௪௮௬)

கெர்ப்பிணிக்குவாதபித்தங் கிளர்ந்துகாணும்
கிராணியதிசாரமென்றால் தளர்ந்துகாணும்
உற்பவித்தசயமீளை காசரோகம்
உற்றிடுசிலேற்பனந்தான் மீறிக்காணில்
நற்பிடித்தரோகமது நலிந்துகெட்டு
நாவுணர்ந்துசயமீளை நாற்றம்ரோகம்
மற்பிடித்தவிஷநீருஞ் சோகைதானும்
வந்திடில்பித்தமுடன் சிலேற்பனமதாமே. (௧௮௭)

சிரரோகமானாலு வாதபித்தஞ்
செறிந்துநிற்கும்நாடியது சீறித்தானே
விரரோகங்கிரந்திகுஷ்ட மானபேர்க்கு
மீறிநிற்கும்பித்தமரண்டு வாதமொன்றும்
தாரோகஞ்சூலையொடு வாதரோகம்
சார்ந்திடுகில்வாதபித்தந் தழைத்துக்காணும்
வரரோகம்வாயுவென்றால் வாதங்காணும்
வாகாகவின்னதென்று அறிந்துபாரே. (௧௮௮)

உற்றதோர்கபந்தனக்குச் சேரும்பித்தம்
உறுதிபெறுவிக்கலுக்குச் சேரும்வாதம்
மற்றதொருசுரந்தனக்கு வாதபித்தம்
வகையானகணைதனக்குப் பித்தம்வாதம்
சித்தமொருமதகரிக்குப் பித்தமாகுஞ்
சீரானகௌசிரோகந் தனக்குப்பித்தம்
குற்றமில்லையிதுமுறையைப் பகுத்துச்சொன்னோம்
கும்பமுனியருடனே நீ கூர்ந்துபாரே. (௧௮௯)

கரணிகத்தில்வாதமென்றால் சிலேற்பனவாதங்
கரணைசூலையானாலுஞ் சிலேற்பனவாதம்
விரணமுடன்நீர்ப்பாடு கோட்பாடானால்
விண்டிட்டநாடியெல்லாந் தளர்ந்துகாணும்
தரணமுறும்பாம்புவிஷங் கொண்டபேர்க்குந்
தாதுவெல்லாங்காணுமற் றளர்ந்துபோகும்

அசனைவடமொழிநூ லுரைத்தவாறு
    அறிந்துரைத்தோம்வயித்தியரா மறிவுள்ளோர்க்கே. (௧௱௦)

கரணிகத்தில்சுரோணிதத்தின் வாதமானால்
    கதித்துநிற்கும்வாதபித்தம் ரண்டிற்சேரும்
விரண்டுமொருமண்டைவலி வெடிசூலையாகும்
    விகற்பமுடன்விஷநீர்கள் வறட்சிகாநதல்
தருணமுறுமூக்கடைப்புத் தந்தரோகம்
    சதையடைப்புச்செவிப்புற்றுப பற்பரோகம்
மரணம்வரும்போதளவும் போகாதென்று
    வயித்தியரேயிந்நூலை மகிழ்வித்தோமே. (௧௱௧)

முன்னாளிற்செய்தகுறை கர்மத்தாலே
    முறையானவெளுப்புவருங் கர்மத்தாலே
இந்நாளில்விஷப்பூச்சி செனன்ந்தானும்
    இசைந்தவட்டையுடன்விஷ மெறும்புதானும்
தன்னாளில்மிருந்தபுழுக் குவிந்தசெங்கோன்
    தான்கடித்தவிஷதோஷஞ் சாற்றக்கேளு
அந்நாளிற்புடையனொடு மண்ணுளியுஞ்சீண்டி
    லதினாலேவருநோயை யறையக்கேளே. (௧௱௨)

கால்தனிலேகடித்தாக்கால் திமிருண்டாகும்
    கைதனிலேகடித்தாக்கால் விரற்குறுகும்
மேல்தனிலேகடித்தாக்காற் றடித்துக்கானும்
    மேன்மையுடன்றலைதீண்டில் சிரங்குபுண்ணாம்
பால்சொரிந்ததாடைதொடில் பொரிந்துகானும்
    பாதத்தில்தான்தீண்டில் பலநோயாகும்
மேற்சிறந்தவிஷப்பூச்சி கடித்ததோஷம்
    மெல்லியரேகுறைநோயென் றுரைக்கலாமே. (௧௱௩)

விஷப்பூச்சிதோஷம்.

பாழ்முறையால்குறைமுடிக்க வந்ததோஷம்
    பாரிலுள்ளோர்பரிகாரஞ் செய்வதேது
ஊழ்வினையாலூடாடிக் கொல்லவந்த
    உகமையதுவறியாமல் யூகஞ்செய்தாய்
தாழ்வினையூடறுவதில்லை கடினமாகும்
    கற்றறிந்துபெரியோர்கள் கண்டுகொள்ள
ஆழ்வினைகளறிந்துமெள்ள வகன்றுபோவீர்
    அரசருனையாறியப் போகாதாமே. (௧௱௪)

விரல்குறுகுங்கால்திமிராம் விஷம்போலேறும்
    மெய்யருந்ததலைசுழலும் வியர்க்குமேனி

பால்போலத்தேகமெல்லாந் தடித்துக்காணும்
பதருபோல்வெளுத்துமிகப் புண்ணுமாகும்
சரசமுடன்பொரிகரப்பான் போலேதோன்றும்
சத்தைதரும்விந்துகெடுந் தடித்துவீங்கும்
நாருலகிற்பூசைசெய்ய வேண்டும்சொன்னோம்
நாடிவந்தகுறைநோவு நாடிற்றுமே. (௧௬௫)

கற்புடையமங்கையரை விருப்பமுற்றுக்
கைம்மருந்திட்டுமிகக் கர்மத்தாலே
முற்பிழையாற்குறைசெய்த கர்மத்தாலே
மூளுவதுபாவந்தான் சிலந்திபோலே
துப்புடனேசிலந்திவண்டு கடித்ததோஷம்
தொல்லுலகில்யாராலுந் தொலைக்கப்போகா
நற்புடனேயிதுவறிந்து பரிகாரங்கள்
நன்மையுடன்பவந்தீரத் தவங்கள்செய்யே. (௧௬௬)

காகம்போல்தேகமது கறுத்துக்காணும்
கனத்தநடுவுடல்குளிர்ந்து தடித்துச்சுற்றும்
ஆகம்போலிரத்தமெல்லாம் வெந்துபோகும்
ஆக்கையுறும்பதனில்மிக வசைந்துபோகும்
கூசமதுகால்கரங்கள் நடக்கில்மெத்த
கொடியநீர்விஷகரப்பன் கொள்கைபோல
பேதமதுமுற்பிழையால் மிகுந்தபாவம்
பெரியோரைதூஷித்த பேதந்தானே. (௧௬௭)

நல்லோர்கள்பெரியோர்கள் நடத்துஞ்செய்கை
நாட்டிலுள்ளதுஷ்டசனம் நகைத்ததாலே
பொல்லாதவிஷக்கடிகள் வந்துபுக்கிப்
பொன்மையுள்ளதேகமெல்லாங் குஷ்டம்போலே
செல்லாதவிஷகடிகள் விஷகுன்மம்பாண்டு
தீராதகன்மவினை செய்தபாவம்
எல்லாருங்காணவிது புவியின்மீதே
இணங்கிவந்தகடிவிஷங்க ளியம்பலாமே. (௧௬௮)

ஆரறிவார்பெரியோர்கள் செய்கையெல்லாம்
அம்புவியிலுபமானப் பொருளறிந்தால்
ஊரறியப்பேரறிய வுலகமெல்லாம்
உடனகைத்துச்சிரிக்கவென் றுலகப்பேய்கள்
சீரறியச்சிறியோர்கள் பெரியோர்தம்மை
சிரித்துநகைத்திடவெகு பாவத்தாலே
நேரறியாவிஷக்கடிகள் போலேவந்து
நேர்ந்துபலவிதமான நீசந்தானே. (௧௬௯)

உலகதனில்செவிடூமை குருடர்தாமும்
ஊக்கமிலாச்சப்பாணி மூக்கிலாதான்
நல்குமதுவிஷக்கடிநீர் குன்மம்பாண்டு
நத்திவரும்பெருவயிறு கவுசியீளை
இலகுமதுபெரியோரைக் கற்புள்ளோரை
ஏக்கமிலாச்சுவஞானி பொருளுள்ளோரைத்
துலங்குமவர்தன்னைமிகத் தூடித்தாக்கால்
தூர்ச்சனர்க்கிந்நோயைத் தொகுத்தார்தாமே. (௨ா)

வேறு.

வன்னியேமிகுந்துதானும் வாயுவைநெருக்கும்போது
உன்னியேயுதாம்விம்மி யுறுகுடல்வெந்துபின்னும்
பின்னுமேயங்கசூலை பெருத்துடனுதாஞ்சார்ந்து
துன்னியேவாய்வுமோதுஞ் சுரோணிதங்கெடுதியாமே. (௨ாக)

கண்டத்தில்வாயுபுக்கிக் கபாலத்தைச்சூழ்ந்துகட்டித்
துண்டத்தில்மேல்ரப்பை சோரமுடல்சார்ந்துபின்னி
அண்டத்திற்கனலாய்ப்பற்றி யனலதுசிரசில்மூட்டிக்
கொண்டுற்றகனித்ததின் சுரோணிதங்கெடுதியாமே. (௨ா௨)

நல்லதோர்நாடிதானு மிடையொடுசுழியும்பற்றிச்
சொல்லியகுதத்தினோடுஞ் சூட்சமாய்வினையினோடும்
வல்லபஞ்சேர்ந்துவன்னி வாய்வொடுகபமுஞ்சேரில்
சொல்லியமருந்துசொன்னேஞ் சொக்கியதவங்கண்டோமே. ()

மார்பினிலுதாந்தங்கி மருண்டுதான்கபத்தைச்சார்ந்து
வார்வொடுதளர்ச்சியுந்தான் வறட்சியுமிகவேகாட்டிச்
சீரொடுநரம்பினோடு திசையொடுவெலும்புசார்ந்து
பேர்பெருவனலில்ரோகம் பெருத்துறவிதங்கட்டானே. (௨ா௪)

அக்கினியெரித்தசூடு ஆதாரமாறும்பற்றிப்
புக்கியேநரம்புதானும் பொன்மயங்கெட்டேதானி
தொக்கியேகபாலமுட்டித் துன்புறும்பாத்துமேவிக்
கக்குமாஞ்சோம்பல்ரோகங் கருத்துள்ளேகண்டுசொல்லே. (௨ா௫)

தாக்கியேமூலந்தன்னில் தருக்கியவாயுவோடே
நோக்கியேவன்னிதானும் நூவலியேயுதாஞ்சார்ந்து
தீய்க்குமாமலமுங்கட்டிச் சேரும்நீர்சுவறிவார
வாக்கியம்பேசுஞ்சொன்னே மயக்கமாமூர்ச்சையாமே. (௨ா௬)

விஷக்கரப்பான் வேறு.

சங்கையில்லாவிஷக்கரப்பான் வரலாறேதுஞ்
சாசமூறுங்கிருமியுருந் தன்மையேது

பொங்கியங்கேயூனுருவிக் கிராணியேது
பூராயமானதொரு பௌத்ரமேது
நங்கையர்கள்போகமுறு மேகமேது
நவிலவொண்ணாக்கிரந்தியது ரோகமேது
கன்குல்பகல்வருங் காந்தலேது
கருத்துடனேயிருந்தவகைக் கருமங்கூறே. (௨௱எ)

உஷ்ணமேமிகுத்துவரும் ஸ்திரீபோகத்தால்
ஊனுருவியஸ்தியிலே வேவுகொண்டு
நட்டமாய்வந்ததொரு மச்சைதன்னில்
நாட்டமுண்டாய்க்கிருமிதென்று நணுகும்போது
மட்டுறவேகிருமியெல்லாம் பறந்தங்கேறி
வகையுடனேமாமிசத்தைத் துளைத்துமேவுந்
திட்டமுடன்வினிகரப்பன் பரந்துமேவித்
தினவுடனேபரபரத்துத் தினவுண்டாமே. (௨௱அ)

சக்கிலந்தானுட்டினத்தில் வேவுகொண்டு
சூதானமலக்கட்டுக் கட்டுப்பட்டால்
அக்குலத்தின்மலமதிலே நாற்றமுண்டாய்
அழுகியங்கேவெந்துருகி வாழும்போது
சிக்கிமலந்தான்புழுத்துக் கிருமியுண்டாம்
தீபனங்கள்சென்றதனாற் கிருமியெல்லாம்
பக்கியங்கேபகுந்தேறிச் சரீரமெல்லாம்
பரபரத்தூர்ந்தேறும் பகைமையாமே. (௨௱௯)

வயிறதனிற்பூநாகந் தன்னைச்சார்ந்து
வருந்தியதுபுற்றுப்போற் பற்றிக்காணும்
எழும்பியதுகிருமிதானிடைந்துபுக்கில்
இயல்பெருகுங்குழல்மடவாய் சொல்லக்கேளு
கயிர்முறுக்கிவிட்டாற்போல் தேகந்தன்னில்
கறகறத்துச்சொறியாகிக் காணுஞ்சிழ்நீர்
உயர்பெருகும்பண்டிதரே கரப்பான்செய்யும்
உறுதிதன்னைநன்றாக வுணிப்பாரே. (௨௱௰)

கிருமியினால்வருந்தோஷம் பெருகவுண்டு
கேட்கிலதன்பிரிவுதன்னைக் கிரமமாகப்
பொருமிவரும்வாயுவெல்லாங் கிருமியாலே
புழுக்கடிபோல்காண்பதுவுங் கிருமியாலே
செருமிவரும்பௌத்திரங்கள் கிருமியாலே
தேகமதுசொறிகுட்டங் கிருமியாலே
துருமிவருஞ்சுரோணிதமுங் கிருமியாலே
சூட்சமுடன்கிருமியதைத் தொழில்செய்வீரே. (௨௱௰௧)

குஷ்டமதுவிஷகரப்பான் விஷநீர்க்கோவை
　கொடுஞ்சூலைசுரோணிதத்தால் தாதுகெட்டு
மட்டறவேகிருமிசென்று மருவும்போது
　வகைவகையாய்க்கிருமியிட விஷநீர்சென்று
துட்டனந்தத்தேகமெல்லாம் பார்க்கும்போது
　சுழிசுழியாக்கிருமிநீர் துன்னிக்கொள்ளுங்
கட்டுறவேகிருமியிட நீரில்வந்த
　கருங்குஷ்டம்விஷகரப்பான் கருதிப்பாரே. (௨௧௨)

மலக்கிருமிநீர்க்கிருமி மஞ்சட்கிருமி
　வாற்கிருமிகருங்கிருமி மண்டைக்கிருமி
தூலக்கிருமிசூறைக்கிருமி சுரோணிதக்கிருமி
　தூலக்கிருமிகணக்கிருமி தாதுக்கிருமி
சொலப்பெரியவாய்க்கிருமி பலக்கிருமியோடு
　சுக்கிலத்தைசென்றறுக்குஞ் சூதக்கிருமி
புலக்கிருமிபுனக்கிருமி சூலைக்கிருமி
　புகழ்வொன்பான்குணத்தைப் பிரித்துப்பாரே. (௨௧௩)

மலக்கிருமிகுடல்தனிலே மருவிநிற்கும்
　மற்றதொருநீர்க்கிருமி விஷநீர்மேவுந்
தூலக்கிருமிநாம்பின்மேல் துள்ளிநிற்கும்
　சுக்கிலத்தின்கிருமியது தாதுகேடாம்
வலப்பெரியவாற்கிருமி யுதட்டிசேரும்
　மண்டையினிற்கிருமியது சிரத்திலேறும்
நலம்பெரியவாய்க்கிருமி யுதட்டிசேரும்
　நயனமதுபற்றிநிற்குங் கிருமியாமே. (௨௧௪)

ரத்தமதுபொருத்துமந்த மஞ்சட்கிருமி
　யியல்பான்கருங்கிருமி யெங்குமேவும்
மத்தசிறகதின்மேவுஞ் சூரக்கிருமி
　பரிவாகமீறிவருஞ் சுக்கிலக்கிருமி
அந்தணர்தம்பதமபோற்றி யறிவுள்ளோர்கள்
　ஆராய்ந்துகிருமியறிந் தவிழ்தஞ்செய்யில்
சித்தியாம்வயித்தியரே தேர்ந்துபாரும்
　திகழ்கிருமியாவுமெழுந் தேகும்பாரே. (௨௧௫)

புலக்கிருமிமூலத்தி லறுக்குங்கண்டாய்
　புணங்கிருமிபுண்ணுக்கும் புகழ்ந்துசொன்னோம்
சிலக்கிருமிராக்ஷதர்போற் கிருமியேறுஞ்
　சீரானகிருமியாவற்றுந் தேர்ந்துபார்க்கில்

நலக்குறியுங்குணங்கள்முதல் நன்றாய்ந்து
நாதனிருதாள்போற்றி நன்மையாக
இலக்குரியபண்டிதரே கிருமிதானும்
இயல்பறிந்துபரிகார மேற்றுவீரே. (உ

கிராணி வருமாறு

கேளுமினிகிராணிவந்த செய்கைதானும்
கிருமையுடன்மூலத்தில் வேவுகண்டு
நாளுமிதுகிருமியினாற் குடலேதின்ன
நாற்றமுண்டாஞ்சுரோணிதந்தா னலமுங்கெட்டு
மீளுமவதுவாயுவங்கே விரவிநின்று
மேவிடிற்கிருமியெல்லாம் விரைவில்தானே
கோளுமதுபலவிதமாய்க் கழியுமப்பால்
குடிகெடுத்தகிருமிசெய்த கிராணிதானே. (உ

கிராணியதின்வரலாறு உதரந்தன்னில்
கிரீச்சனமாய்ப்புசித்துவரும் பதார்த்தத்தாலும்
கிராணியிடகுடல்தனிலே யோடிநின்று
கிலுகிலென்றவர்யுவங்கே யிரைச்சலாக்கிக்
கிராணியதுகொண்டுதான் வயிறூதிக்
கழியுமதுபொருமலமாய் விதம்வெவ்வேறும்
தராணியிடந்துர்ப்பலமா யலைச்சல்பட்டுச்
சலமலமும்பலவிதமாய்ச் சாயுந்தானே. (உ

வேறு.

சொல்லுடன்சூட்சநாடி சுடரொளிபோற்காணி
வெல்லுவேன்புவியுள்ளோரை விதமுறுநூலினாலே
மல்லுவேன்சாஸ்திரத்தை வகைவகையாகப்பாடிக்
கல்லதைக்கரைத்தாற்போல நூல்களைக்கருதிப்பாரே. (உகக)

வேறு.

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானாய்
ஐந்தெழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுடநினைவிலொளி வதுவேயாகும்
விகாரமுடனுதார மாறேழாகும்
உகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
உற்றுநிற்குங்குருநாடி யொன்றுபோலச்
சிகாரமெனுஞ்சடாக்ஷரத்தை மூலநாடி
சிவசிவாவென்றநிலை தெளிந்துபாரே. (உஉ௰)

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
ஊடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுகெருநேர்மைபோல் வருகும்பித்தம்
மருவியேசிலேற்பனத்தில் மதுவுண்டார்போல்
என்றைக்கும்வாதபித்தம் நடுவேநிற்கும்
ஏறுவதுங்குறைவதுவு மில்லைசொன்னோம்
கன்றுக்குப்பாவிறங்கும் நேர்மைபோலக்
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. (உஉக)

வேறு.

உற்றதோர்வாதந்தன்னி லுறுதியாய்க்கீழுமேலும்
பற்றியேமூன்றும்பின்னும் பதிந்துதான்பயணஞ்சார்ந்து
சுற்றியேவிசையினூடே சுழிமுனை தன்னைநோக்கும்
குற்றியேதம்புருவீணை குறியெனக்கொள்கைபாறே. (உஉஉ)

நாடிடுந்தம்பூருதன்னில் நரம்பிசைகளுந்தந்தி
கூடிடுந்தந்திதன்னைக் குறியெனத்தெறிக்குமாபோல்
ஓடிடுமசையில்நாடி யுன்னிமேபதியவொன்று
சாடிடுநாடிதானுந் தான்குருநாடியாமே. (உஉ௩)

தந்திக்குத்தந்திவெவ்வேறு நாதமும்பலதரம்போலக்
குந்திக்குவாதபித்த மையமுங்கொள்கைபோல
வந்திக்கும்விதங்களெல்லாம் வகைவெழுதம்புருவீணை
விந்தைக்கும்விங்கணுடி விவரந்தானறிந்துபாரே. (உஉ௪)

மந்தமுஞ்சுருக்குஞ்சாந்தம் மதிதருங்கோபமேகம்
இந்துவைநாதம்போல விசைக்குமந்நாடிகண்டாய்
உந்தியவாதநாடி முழுதுமேசாந்தமாகும்
மந்தமாய்சேத்மநாடி மகிழ்சுரைப்பித்தமாகும். (உஉ௫)

மாந்தமுஞ்சுக்கிலந்தான் வகையுடன்வாதபித்தம்
முந்தவேசாந்தமேகம் முற்றிடில்வாதஞ்சிலேற்பம்
அந்தமாஞ்சாந்தசீதம் அப்படிபதியுஞ்சிலேற்பம்
விந்தமாங்கோதுகோசம் விளங்கிடிற்பித்தஞ்சிலேற்பம். (உஉ௬)

நளினமாஞ்சாந்தங்கோபம் நாட்டியசிலேத்மம்வாதம்
விளினமாஞ்சிறந்தசாந்தம் மேவிடிற்பித்தம்வாதம்
குளினமேகூறுமேவுங் குணந்தனைப்பிரித்துப்பார்க்கில்
தெளின்மாம்நரம்பினோசை சென்னியில்கூர்ந்துபாரே. (உஉ௭)

இப்படியொன்றமைந்து விதனுடனேழுமாகிச்
செப்பினேந்திசையில்நாடிச் செயம்பெறுங்குணங்களெல்லாம்
ஒப்புடனுரைகள்செய்தே னுலகினிலறியவேண்டி
வைப்புறுபொதிகைவாழு மருள்முனியுரைசெய்தீரே. (உஉ௮)

குருநாடியென்றுதானே குறிப்புடன்பதிதானாகுந்
திருநாடிசொல்லக்கேளீர் சிவனயன்மாலுமாகும்
வருமோடிபஞ்சநாடி வகையுடனெழுத்தஞ்சாகுந்
தெருமோடிசந்தநாடி சனத்தொளிர்சதமெலும்பே. (௨௨௯)

சொல்லியநரம்புதானும் தோற்றுபின்கலையினோடு
வல்லிசிங்குவைகாந்தாரி வகுப்புடன்புருடன்தானும்
வெல்லியபிரமதேவன் விளங்கிடுமத்தியோடு
புல்லியசீதாங்கனோடு போற்றுறுநாடியாமே. (௨௩௰)

இடையொருநாடிதானு மிசைந்திடும்வலதுகாலில்
அடைவுடன்சுற்றியேறி யமர்ந்திடுமவீணைத்தண்டில்
மடமயில்மானேயின்னு மிடதுகண்தன்னைநோக்கி
உடலெனவோடிநிற்கு முண்மையையறிந்துகொள்ளே. (௨௩௧)

பின்கலையானநாடி யிடதுகால்தன்னைப்பற்றி
முந்தவேசுற்றியேறி வலதுகண்தன்னைமூட்டும்
பின்கலைசுழுனைநாடி மூலத்தைப்பற்றிநின்று
அன்பெனச்சுழுமுனையி லயர்ந்துதானஞ்சுண்டாமே. (௨௩௨)

அத்தியாம்நாடிதானு மமர்ந்திடுமெலும்பைப்பற்றி
சித்தியாஞ்சிங்குவைநாடி சேர்ந்திடுநாவைப்பற்றி
முத்திரைகாந்தாரிதானும் மூக்கினைப்பற்றிநிற்கும்
கத்தியேயலம்புரிக னாற்சதுரத்தில்நிற்கும். (௨௩௩)

பூமகள்புருடன்றானும் புரையறவுந்திலாறும்
நாமகள்பிரமன்றானும் நாடியபாம்புசேரும்
கோமகள்சீதாதேவி கொடுமுடிமேவிநிற்கும்
வாமகளிவைகட்கெல்லாம் பொருந்துருவகையைப்பாரே. (௨௩௪)

சொன்னார்நாடியிருநூறு தோற்றுமுப்பத்தைந்தினிலே
அன்னேதனக்குஅரனாரு மன்பாயெடுத்துத்தானுரைத்தார்
முன்னோராயுள்வேதமிது முழுதும்நாடிதானுரைத்தார்
பன்னோமாந்தர்க்குறுதியுடன் பகர்ந்தார்முனிவர்முற்றுமே. (௨௩௫)

அகஸ்தியர் அருளிச்செய்த

குருநாடிசாஸ்திரம் முற்றிற்று.